பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணு ஒன்று

வருட சந்தா முன் பணம்	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1–12
வெளிநாட்டிற்கு ,,	...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஸு ஐப்பசி-மீ 15-உ (31—10—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 27.

உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சாக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதா போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்டத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எம்து கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்திய
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

ஹும்! ஹும்!!
டேபில் டயம்பீஸ் ஹும்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனாம் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தீ பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

சேரமாதேவி தமிழ் குருகுலம்,

காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. வெ. சு. ஐயரால் பொதுப் பணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சேரமாதேவி தமிழ் குருகுலம் ஸ்ரீமான் மஹாதேவ ஐயரால் பலாத்காரமாக ஆக்ரமித்துக் கொள்ளப்பட்டு மிகுந்த நெருக்கடியான நிலைமையில் இருக்கிறதென ஸ்ரீமான் கும்பலிங்கம் பிள்ளை தந்திமூலம் அறிவிக்கிறார்.

எதுவேண்டும்?

மணவாழ்க்கையின் மர்மங்கள்	ரூ. 2—4
கர்ப்ப சாஸ்திரம்	1—8
மனோவசிய சாஸ்திரம்	1—8
ரதி சாஸ்திரம்	1—4
ஸதிரீ புருஷ ரகசியம்	1—0
சதிபதிகளின் மர்மம்	1—0
சரீர மர்ம சாஸ்திரம்	1—0
ரதிமதன சிங்கார ரஹஸ்யம்	1—0
மதனரதி ரஹஸ்யம்	1—0

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

திருவல்லிக்கேணி பண்டு லிமிடெட்.

சென்னை பிராமணரல்லாத சகோதரர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

திருவல்லிக்கேணி பண்டு லிமிடெட் என்று பெயரிட்ட பாங்கி ஒன்று சமீபத்தில் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதின் விதிகளின் முதன்மையானது பிராமணர்கள்மாத்திரம் பங்காளிகளாகவிருக்கலாம் என்று கண்டிருப்பதோடு இதர வகுப்பினர் தங்களுடைய பணத்தை டிபாசிட்டு செய்யவும், கடன் முதலானது வாங்கவும் செய்யலாமென்று இருக்கிறது. பாங்கியின் லாபம் பங்காளிகளுக்கே உரியது. ஆகையால் இதர வகுப்பினரையும் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்ள அந்த பாங்கியின் அதிகாரிகள் விதிகளை மாற்றும்வரையில் பிராமணரல்லாத சகோதரர்களை ஷை பாங்கியில் லேவாதேவி வைத்துக்கொள்ளாமலிருக்கும்படிக்கு மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று திரிசிரபுரம் மு. சிவஞானம் பிள்ளை எழுதுகிறார்.

குறிப்பு.

இது உண்மையாயிருக்குமானால் வகுப்பு துவேஷமும் வகுப்பு பிரிவினையும் பார்ப்பனரிடமிருக்கிறதா? பார்ப்பனரல்லாதாரிடம் இருக்கிறதா? என்பதை வாசகர்களே கவனிப்பார்களாக.

ப—ர்.

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்

வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி ஏப்பம், மார்நோய், பக்கநோ முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

கீழ்காய் நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்
8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0
ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0
வி. பி. தபாற் செலவு வேறு.

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, தசகும்பகோணம்.

நிலக்கோட்டை.

ஸ்வாமி விவேகாநந்தா வித்தியாபிவிருத்திச் சங்கத் திறப்பு விழா.

சோழவந்தான் ஸ்ரீமான்கள் எஸ். பட்டாபிராம அய்யர், சேர்மென் கண்ணாபிர முதலியார் (தேசீய தரும பள்ளிக்கூட காரியதரிசிகள்) சுப்பிரமணிய முதலியார், வெங்கிடசாமி ஐயர் ஆகிய கனவான்கள் விவேகாநந்தர் உருவப்படம் வைத்து வாத்திய கோஷத்துடன் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். அட்சய வருஷம் ஐப்பசி மாதம் 1-ந் தேதி மாலை 6-மணிக்கு ஸ்ரீமான் எஸ். பட்டாபிராம அய்யர் தலைமையில் விழா இனிது கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியார் உள்ளூர் நா. ச. காமாக்ஷி ஈஸ்வர பத்தர் ஒரு வக்கீல் கனவான் ஆகிய மூவரும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஸ்ரீமான் சுப்பா நாயுடு அவர்களால் தேசீய கீதம் பாடப்பட்டது. ஸ்ரீமான்கள் நா. ச. காமாட்சி ஈஸ்வர பத்தர் க. பொன்னுசாமி பிள்ளை காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என நிலக்கோட்டை ஸ்ரீமான் நா. சொ. ராமசாமி பத்தர் அறிவிக்கிறார்.

மதனகேசரி.

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும் மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போக சித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

பிரமேககுல சம்ஹாரி.

சகல வெள்ளை வெட்டை, நீர்க்கடுப்பு, தந்தி மேகம், ரணம், அரைசிலிப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளையுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீர்யம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. I)

ஸ்ரீமான் சீநிவாச அய்யங்கார் அவர்கட்கு கைவல்ய சாமியார் எழுதுவது.

(முன் கடிதத்தின் தொடர்ச்சி)

தாங்கள் வெள்ளைக்காரரிடம் அதிகம் பழகி அவர்கள் தந்திரங்களைத் தெரிந்திருப்பதாக பெத்துநாய்க்கன் பேட்டை பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். இப்படிச் சொன்னதானது தங்கள் கட்சி ஜனங்களை பிரமிக்கச் செய்யவோ தங்களை, அறிவிலாத பாமர ஜனங்கள் பெருமையாக நினைக்கவோ தங்கள்கூட ஆடுபவர்கள் தங்களை மதிக்கவோ கருதி தங்கள் மனதை ஒழித்து, வேண்டுமென்றே பெருமை பேசியிருந்தாலும், அல்லது உங்களை உங்கள் மனமே ஏமாற்றி நீங்கள் சொன்னதை நீங்களே நிஜமென்று நினைத்துச் சொல்லி இருந்தாலும் இரண்டும் உங்கள் கருத்துக்குப் பிரயோஜனப்படுவதில்லை. வெள்ளைக்காரர் தந்திரங்களை நீங்கள் பழகினதிருக்கட்டும். முதலாவதாக தங்களையும் தங்களைப் போன்றவர்களையும் பற்றி வெள்ளைக்காரர்கள் எப்படி மதிக்கிறார்கள்! என்பதும் நம்ஜன சமூகங்களைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? என்பதும உங்களுக்குத் தெரியுமா?

சுவாமிவிவேகாநந்தர் "கிழக்கும் மேற்கும்" என்ற தலையங்கத்துடன் "உத்போதம்" என்ற பத்திரிகைக்கு எழுதிய வியாசத்தில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நம்மைப் பற்றி நினைப்பது எப்படி என்பதை விளக்கியிருக்கிறார். அதை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்." பார்வைக்கு மாத்திரம் மனிதர்களைப் போன்றிருக்கின்ற முப்பதுகோடி ஜீவர்களின் ஒரு கூட்டம் தங்களுடைய சொந்த ஜனங்களாலும் அந்நிய ஜன சமூகத்தினாலும் தங்களுடைய சொந்த மதத்தினராலும் அந்நிய மதத்தைச் சேர்ந்தவர்களாலும் கீழே போட்டு மிதிக்கப்பட்டதால் ஜீவித பலமற்றுப் போனவர்கள். ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கு அடிமையைப் போல் சுயபுத்தி யில்லாதவர்கள். நம்பிக்கையற்றவர்கள், முன்னற்றவர்கள், பின்னற்றவர்கள். எவ்வளவு நிர்ப்பந்தமாயிருந்த போதிலும் சுயநல அடிமை வாழ்விலேயே இச்சையுள்ளவர்கள். தமது விஸ்வாச மற்றவர்கள். நம்பிக்கையற்றவர்கள். தன்னை இரட்சித்துக் கொள்ளுவதற்காக இழிந்த தந்திரம் வஞ்சகம் கபடம் இவற்றை கையாள்பவர்கள். சிரத்தையேயற்றவர்கள். சுயநலசொரூபம். பலசாலிகளின் பாததூளிகளை நக்குகிறவர்கள். அவலட்சணமான பேய்த்தனமான மூடக்கொள்கைகள் நிறைந்தவர்கள். தங்களுக்கு அஸ்திவாரமாக யாதொருவித சன்மார்க்க நிலையும் அற்றவர்கள்; அழிந்து ஜீரணித்துப்போகின்ற ஒரு பிணத்தின்மேல் பல புழுக்கள் இருப்பதுபோல் இத்தகைய முப்பதுகோடி ஜனங்கள் இந்தியாவாகிய சரீரத்தில் மொய்த்துக்கொண்டிருக்கின்றனர் என்பதுகளாகிய இதுதான். ஆங்கிலேய உத்தியோகஸ்தனுககு நம்மைப்பற்றி சாதாரணமாகத் தோன்றுவது." இந்தவிதமாக நினைத்துக்கொண்டிருக்கும் வெள்ளைக்காரர்களிடம் நீங்கள் பழகின அநுபோகமென்ன? அவர்களிடம பழகித் தெரிந்துகொண்ட அவர்கள் தந்திரமென்ன? அவர்கள் இந்த சமூகத்தையும் மனித வர்க்கமென்று நினைக்க நீங்கள், நமது சமூகத்திற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? "சுயராச்சியம் வந்தால் எல்லாம் வந்துவிடும்; என்னை சட்டசபைக்கு அனுப்புங்கள்; அனுப்பினால் அதிகாரவர்க்கத்தை தொலைத்துவிடுகிறேன். பின் எல்லாம் நம்முடையது" என்கிறீர்கள். நமமைப்போன்ற நமதேசத்து நம் ஜனங்களுக்கு வழியில் நடக்க பாத்தியதை கொடுக்காத நீங்கள் சுயராச்சியத்திற்கு லாயக்கா? ஜனசமூகம் சீர்திருத்தப்படாமல் சுயராச்சியம் வருமா? உங்களைப் போன்றவர்களின் தப்பிதத்தினால் கரைசேராமலிருக்கும் ஜனங்களை நீங்களும் இன்னமும் அதிகமான ஆழத்தில் கொண்டுபோய்விடுகிறீர்கள். ஐரோப்பாவிலும்கூட பாதிரிகளின் வைதீகக் கொடுமையான ஆதிக்கத்தைத் தொலைத்தபிறகுதான் ஐரோப்பாதேசம் முன்னுக்கு வந்தது என்பதை தாங்கள் படித்ததில்லையா? அதுபோலவே இங்குள்ள வைதீகமும் ஒழியவேண்டும்; ஒழிந்த அன்றுதான் இந்தியாவும் முன்னுக்கு வருமென்பதை எல்லா மேதாவிகளும சொல்லியிருக்கிறார்கள்.

தாங்கள், ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி ஆச்சாரியர், சாஸ்திரி முதலிய ராஜ்யவாதிகளும் சர். சி. பி. இராமசாமி அய்யரைப்போன்ற அநேக உத்தியோகவாதிகளுமான பிராமணராகிய உங்களுக்கு வைதீகமுண்டா? பிராமணக்கிருத்தியமுண்டா? இருந்திருந்தால் ராஜ்யவாதிகளும் உத்தியோகவாதிகளுமாக ஆவீர்களா? அதை ஒன்றுமட்டும் நினைத்துப்பாருங்கள் அப்படியிருக்க மற்றவர்களை ஏன் வைதீகக்கொடுமையில் ஆழ்த்தப் பார்க்கிறீர்கள்? வைதீக கொடுமையில் கீழாக்கப்பட்டிருக்கிறவர்களையும் படுகிறவர்களையும் அதினின்று மீட்டாலல்லவோ நமதுநாடு சுயராஜ்ஜியத்திற்கு லாயக்குடைய நாடாகும் இது தங்களுக்கும் தெரியும். தெரிந்திருந்தும் "வைதீகர்கட்கு கோபம் வருகிறது அதனால் அவர்களை விட்டுவிட்டேன்"! என்கிறீர்கள். முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டுகளினாலும் போடப்பட்டு அவர்கள் செலவிலேயே பழுதுபார்க்கப்பட்டு விளக்குவைத்த ரோட்டில் நாடார்கள் நடக்கக்கூடாதென்னும் வைதீகத்திற்குப் பயந்து வந்த நீங்கள் வெள்ளைக்கார வைதீகர்கள் கோபத்திற்கு நீங்களும் உங்கள் கட்சியுமென்ன பதில் சொல்லுவீர்கள்? உங்கள் தந்திரமெல்லாம் பிராமண ஆதிக்கம் அப்படியே இருக்கவேண்டும்; சுயராஜ்ஜியம் சுயராஜ்ஜியமென்று பாமர மக்கள் ஏமாறும்படி கத்தி வெள்ளைக்காரனுடைய தந்திரம் பழகி உத்தியோகத்தை நாம் பிடுங்கிக் கொள்ளலாம். நம் கூட்டத்தார் கருமாந்திரத்திலிருந்து கல்லெடுப்புவரையிலும் பார்த்துக்கொள்ளுவார்கள் என்கிற சுயநய சொரூபமான உங்கள் மோசடியே ஒழிய வேறென்ன? தங்களைவிட தைரியமான பேச்சும், கெம்பீரமும் தர்க்கரீதியில் சூட்சும புத்தியுடையவர் சேலம் சி. விஜயராகவாச்சாரி அவர் இந்தியா சட்டசபையிலிருந்து திரும்பிவந்து சபையின் அனுபோகம் சொல்லுகையில் அங்கு ஒன்றுமே செய்யமுடியாது; பெரிய உத்தியோகஸ்தனிடம் பழகலாம் இவைதான் என் அனுபோகமென்றார். இவையனைத்தும் தங்களுக்குத்தெரியும். தெரிந்தும், தாங்கள் சட்டசபைக்குப் போவதின் நோக்கமென்ன? அங்குள்ள உத்தியோகஸ்தர்களுடைய தயவைச்சம்பாதித்து வைதீகக்கொடுமைக்கு யாராவது விரோதமாக நடந்தால் வைதீக கொடுமையை நிலைநிறுத்த சட்டங்களைத் திருத்தும்படியாகச் செய்யவும், 144 தலையில் வைத்தழுத்தவும், உங்கள் கூட்டத்து பந்துக்களுக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுக்கவும், பெருமைக்கும், கௌன்சில் மெம்பராகவும் மற்றெல்லா விஷயங்களுக்கும்உதவியாக இருப்பதற்கல்லாது பின் எதற்குத் தாங்கள் சட்ட சபை போவது? எட்வர்டு சக்கரவர்த்தி இளவரசராயிருந்த சமயம், இந்தியா வந்து போனார். போய் தாயாரான மகாராணியாரிடம் "பம்பாய் நமக்கு பந்து, கல்கத்தா நமது சிநேகிதன், சென்னை நம்முடைய வேலைக்காரன்" என்று சொன்னாராம். பிச்சை எடுப்பவனும், பிச்சை எடுக்க அதிகாரத்துடன் கூச்சமிலாது பல்லைக் காண்பித்து பதுங்கி நடப்பவனும் உத்தியோகத்திற்கு வந்து மனிதத்தன்மையை விட்டு தலையை நீட்டி வாயிக்கு கீழே கையைக் காண்பித்து முதுகை வளைத்து இரண்டு காலையும் கூட்டி சலாம்போடுவதைப்பார்த்துத்தான்சென்னைவாசிகளை வேலையாட்கள் என்று வெள்ளைக்காரர்கள் சொல்லுகிறார்கள். இப்படி இருக்கையில் அவர்களுடைய தந்திரங்களையெல்லாம் பழகி விட்டேன் என்று தாங்கள் சொல்லுவது ஒவ்வொரு வேலையாட்களும் எஜமான்களின் தந்திரங்களைத் தெரிந்திருப்பதாக அவர்கள் கூட்டத்தில் பேசிக் கொள்ளுவதுபோலிருக்கிறது. நம தேசத்தில் வெள்ளைக்காரர் செய்யும் சட்டங்களும் அநீதிகளும் வேறு எந்த தேசத்திலாவதுண்டா என்று நீங்கள் சொல்லுகிறீர்களா? நம்மைப்போல் எந்த தேசத்திலாவது இருந்திருக்கிறார்களா? இருக்கிறார்களா? பத்து வயது பெண்ணை படுக்கைக்குக் கூப்பிட்டு வராமல் மண்டையிலடித்து கொன்ற கதையும் 13 வயதில் புருஷனோடு கூடியிருக்க மாட்டேனென்றதற்கு எண்ணையால் எரித்த கதையும், மகாத்மா காந்தி தினமுமெழுதுகிறார். இதையெல்லாம் வெள்ளைக்கார வைதீகர்களும் படிப்பார்களே. அவர்கள் நம்மை என்ன மதிப்பார்கள் காட்டுமிராண்டிகள் என்று மதித்தால் குற்றமாகுமா? உலக சேவை செய்யும் தாங்கள் இதற்கென்ன பரிகாரம் தேடினீர்கள். வைதீகத்திற்குப் பயப்படாத அய்யங்கார்களான சட்டசபை மெம்பர்கள் சம்போகத்திற்கு 13 வயது போது மென்றார்களே. இப்போது போரும், வைதீகத்திற்குப் பயந்த அய்யங்காரான தாங்கள் பத்து வயது போதுமென்றுதானே சொல்லவேண்டும். குழந்தைகளான பெண்களிடம் சம்போகம் கூடாதென்றொரு சட்டம் கொண்டுவந்தால் அதைத் தொலைக்கும் அய்யங்கார்களான நீங்கள் தானா தேசத்திற்கு விடுதலையை வாங்கிக் கொடுக்கிறவர்கள். வெள்ளைக்கார விருந்தில் சோடா, பிஸ்கோத் சாப்பிடுகிறீர்கள். டீ, காபி ஆசாரத்திற்கு விரோதமென்கிறீர்

திருமணச் சீர்திருத்தம்.

———o———

ஆரியப் புரோகிதரும் வடமொழி மந்திரங்களும் ஒழிய வேண்டும்.

தாய்மொழி மந்திரங்களும் திராவிட குருக்களும் இடம்பெறவேண்டும்.

இந்திய மக்கள் முன்னேற்றமடைவதன் பொருட்டு இதுகாலை அறிஞர் பலர் முன் வந்து பற்பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்கள். அரசியல் சம்பந்தமாகவும் பல்விதக் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. நாம் உண்மையான சுயராஜ்யம் பெறுவதற்கு அரசியல் கிளர்ச்சிகள்மாத்திரம் போதா. சமுதாய சீர்திருத்தங்களும் சமயசம்பந்தமான சீர்திருத்தங்களும் இதுகாலை இன்றியமையாது வேண்டப்படுகின்றன. நமது போலிப்பழக்க வழக்கங்களை நாம் சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டும். கைம்பெண் மறுமணம் செய்வது, பால்ய விவாகத்தைத் தடுப்பது, தீண்டாமை ஒழிப்பது, சாதிவித்தியாசங்களை ஒழிப்பது, மனித சமூகத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் பேதமில்லாதிருப்பது, அனைவரும் சமத்துவமாக ஆலயம் புகுவது, மடாதிபதிகளின் அக்கிரமங்களை ஒழிப்பது, கட்டாய இலவசக் கல்வி புகட்டுவது, குடியை நிறுத்துவது, வியபசாரத்தைத் தடுப்பது, தேவதாசிகளை நல்லறப்படுத்துவது, பார்ப்பனபுரோகிதர்களை ஒழிப்பது, முதலியபற்பலசீர்திருத்தங்கள் இக்காலத்தில் செய்துகொள்ளாமல்வேறு எக்காலத்தில்தான் செய்வது? அரசியல் கிளர்ச்சியில் மாத்திரம் மக்கள் முழு மனதையும் செலுத்திவிட்டால்இச்சீர்திருத்தங்களை நடத்துவது எப்போது? இச்சீர்திருத்தங்கள் ஒவ்வொன்றாகச்செய்துமுடிக்கப்படுவனவா? அரசியல் கிளர்ச்சியைப்போன்றே இவைகளும் இக்காலத்திலேயே நடைபெறவேண்டுமன்றோ?

அன்னியரிடத்தில் நாம் ஒருவிதத்தில் அடிமைப்பட்டிருக்கிறோமென்றால், நமது போலி ஆசாரங்களுக்கும் ஆரிய புரோகிதருக்கும் நாம் பலவிதத்தில் அடிமைப்பட்டிருக்கிறோம். தேசபக்தர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் (அவரைக் கடவுள் காப்பாராக) சொல்லுவதுபோன்று இதுகாலை நமது மக்கள் பார்ப்பனப் புரோகிதனுக்கும், காய்ந்த தருப்பைப் புல்லுக்கும் அடிமைப்பட்டிருக்கிறார்கள். அன்னியரிடமிருந்து அடிமைத் தனத்தை விலக்கிக்கொள்ள விரும்பும் நாம் ஆரியருக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விலகிக்கொண்டு சுயமரியாதையுடன் வாழவேண்டாமா? நாம் சுயமரியாதை யடையவேண்டுமானால் நாம் பார்ப்பனப் புரோகிதர்களை அவசியம் ஒழிக்கவேண்டும். ஆரியப்புரோகிதன்மாத்திரமல்ல வடமொழி மந்திரங்களையும் ஒழிக்கவேண்டும். ஏனென்றால் ஆரிய புரோகிதனுக்கும் வடமொழி மந்திரங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. ஆகவே நமது வீடுகளில் நடைபெறும் திருமணம் சிரார்த்தம் முதலிய காரியங்களில் ஆரியப் புரோகிதனும் வடமொழி மந்திரங்களும் இடம்பெறலாகாது. கலியாணம் சிரார்த்தம் முதலிய முக்கிய காலங்களில நமது தாய்மொழியைப் புறக்கணித்து அயல் மொழியாகிய சமஸ்கிருதத்தை உபயோகப்படுத்துவது முக்கிய காலங்களில்நமது தாயைப் புறக்கணித்து அயலான் தாயை மரியாதைசெய்கிறதுபோலிருக்கிறது. இது சுயமரியாதையா? அறிவாளிக்குஅழகா? தமிழனுக்கு அடுத்ததா? கடவுளுக்கு சம்மதமாகுமா? சற்றே யோசித்துப்பாருங்கள்.

மந்திரங்களைச் சமஸ்கிருத் பாஷையில் சொன்னால்தான் கடவுளுக்கு விளங்குமா? மற்றபாஷைகள் கடவுளுக்குத் தெரியாதா? ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மனி இந்தி, உருது முதலிய அன்னிய பாஷைகளை, மனிதராகிய நாம் கற்றுப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் செய்கிற போது கடவுளால் உண்டாக்கப்பட்ட பாஷைகள் கடவுளுக்கே தெரியாதென்று ஒருவன் சொல்வானானால் அப்படிச் சொல்லுகிறவனை விட அதனைக்கேட்டு உண்மையென்று நம்பிக்கொள்ளுகிறவன்தான் முழு முட்டாளன்றோ? சில நூற்றாண்டுகளுக்கு முன் கிறிஸ்தவர்களுக்குள் ஒரு மூட நம்பிக்கையிருந்தது; அதாவது இயேசு கிறிஸ்து பேசிய பாஷையாகிய இப்ரூ மொழியில் மாத்திரந்தான் கடவுளைத் தோத்திரம் பண்ண வேண்டும் என்றும், அப்பொழுது தான் கடவுள் அதனை விளங்கிக் கொள்வார் என்றும் ஒரு மூட நம்பிக்கை யிருந்தது. இம்மூட நம்பிக்கையை பிற்காலத்து அறிஞர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. கடவுளுக்கு எல்லாப் பாஷைகளிலும் தோத்திரம் செய்யலாம் என்றும், எல்லாப் பாஷைகளும் கடவுளுக்குந் தெரியும் என்றும் உண்மையான பக்தியுடன் எந்தப் பாஷையில் தோத்திரம் சொன்னாலும் கடவுள் அதனை ஏற்றுக் கொள்வார் என்றும் அவர்கள் பாமர ஜனங்களுக்குச் சொல்லி அந்த மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டார்கள் இப்பொழுது கிறிஸ்தவ ஆலயங்களில் தேசத்தைப் பொறுத்தபடி. பற்பல பாஷைகளில் மந்திரங்கள் சொல்லப் படுகின்றன. அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்குள் இருந்த மூட நம்பிக்கையைப் போலத்தான் இக்காலத்தில் நம்மவர்களுக்குள் ஒரு மூட நம்பிக்கை யிருக்கிறது. அந்த மூட நம்பிக்கை என்னவென்றால் பூணூல்தரித்த ஒரு பார்ப்பனப் புரோகிதன் வந்து சமஸ்கிருத தோத்திரங்களைச் சொன்னால்தான் கடவுள் நேரே அதனை ஏற்றுக் கொள்வார் என்ற போலித்தனமான மூட நம்பிக்கையாகும். நமது மக்களில் பெரும் பான்மையோர் இந்த மூட நம்பிக்கையில் உறுதிகொண்டிருக்கிறார்கள். இந்த மூட நம்பிக்கை தான் பார்ப்பனர்களுக்கு நமமை மீளா அடிமையாக்கி விட்டது. அன்றியும் நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியின் அருமை பெருமையையும் கெடுத்து விட்டது. இந்த மூட நம்பிக்கை நமமவர்களிடம் குடிகொண்ட பின்னர் தான் தமிழும் தமிழரும் சுயமரியாதையை இழந்து விட்டனர். நமது வைணவ ஆழ்வார்களும், சைவ நாயன்மார்களும் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் நமது தாய் மொழியின் சுயமரியாதையைக் காப்பாற்றி வந்தனர். அவர்கள் தமிழ் மொழியிலேயே தோத்திரங்கள் பாடியும் மந்திரங்கள் சொல்லியும் முத்தியடைந்தனர். ஆகவே கடவுளுக்குச் சமஸ்கிருத தோத்திரந்தான் சொல்லவேண்டும் என்றுசொல்வது மூடத்தனமாகும். அதனை அறிவாளிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நாம் நமது சுயமரியாதையையும் நந்தாய் மொழியின் உயர்வையும் காப்பாற்ற வேண்டாமா? இது தமிழர்களுக்குப் பிறந்த தமிழ் மக்களின் கடமையல்லவா? இதனை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துணரவேண்டும். இது விஷயமாக பல அறிஞர்கள் இதுகாலை வேலை செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டின் அரும் பெருந்தலைவர்களுள் ஒருவராகிய திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் பார்ப்பனப் புரோகிதர்களைச் சுப காரியங்களிலும் அசுப காரியங்களிலும் ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லிவருகிறார்; செய்கையிலும் செய்து வருகிறார். இச்சீர் திருத்தத்தில் நாயக்கர் அவர்களை விட இன்னும் ஒரு படி அதிகமாகச் சென்று

(இதன் தொடர்ச்சி 13-ம்பக்கம் பார்க்க)

கள். சீமைக்குப் போவதாயிருந்தால் வந்து புண்ணியார்ச்சனை செய்து கொள்ளுவோம் என்கிறீர்கள். கேக், பன், சேமியா, இங்கிலீஷ் மிட்டாய், டியாஞ்சலெசிலும் ஆரிசனிலும் வாங்குகிறீர்கள். செய்கிறவர்கள் எங்கள் வீதியில் வரப்படாதென்கிறீர்கள். இதையெல்லாம் வெள்ளைக்காரன் நினைத்து உதடு அசையாமல் உள்ளிலேயே சிரிக்கிறானே அது உங்களுக்குப் படவில்லையா? "இந்தியர்கள் கூலி காட்டுமிராண்டித்தனமான நடை உடை பாவனை யுடையவர்கள்; வெள்ளைக்காரர்களாகிய நம்மை கடவுள் உலகத்தையாள உண்டுபண்ணியிருக்கிறார். எல்லாவித போக போக்கியங்களும எங்களுக்கே இருக்கவேண்டும். ஏகாதிபத்தியத்தில் ஒரு அங்கம் கூடக்குறையப்படாது. ஒரு நெருப்புப் பெட்டி இந்தியாவில் விற்பது குறைந்தால் வைசிராய் உடனே வந்துவிட வேண்டும். ஒரு வெள்ளைக்காரனைத் தப்பித் தவறி யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் சீமையில் கூடிவிட்டார்கள் கூட்டம். பார்லிமெண்டில் கேள்வி மேல் கேள்வி பிறந்துவிட்டது. எல்லாருக்கும் சம்பள உயர்வும் ஆய்விடும்" என்கிறார்கள். இதல்லவா வெள்ளைக்கார வைதீகர்களின் நிக்ஷேபம். அவர்கள் வைதீகம் அவர்களுக்கு வேண்டும். உங்கள் வைதீகம் உங்களுக்குவேண்டும் இந்த இரண்டு வைதீகமும் தொலைந்தாலல்லவோ நம் தேசம் முன்னுக்கு வரும். நம் ஜாதியில் பிறந்து நம் தேசத்தில் வளர்ந்து நம் மதத்திலிருந்து நம்பேரைய வைத்து நம் சாமியையே கும்பிட்டு நம்மையே குருவாக நினைத்து வணங்கி நிற்கும் ஒரு சிஷ்யனை நம் சாமியின் உத்சவம் பார்க்க வீதியில் விடாத நமக்கு சுயராஜ்யம் யாராவது கொடுப்பார்களா? நம்மை எந்த உலகமாவது மதிக்குமா? ஆதலால் உங்களை நம்பி வெள்ளைக்காரரிடமிருக்கும் அதிகாரத்தைப் பிடுங்கி உங்களிடம் ஒப்புவிக்கலாமா? நீங்களே யோசித்துப்பாருங்கள்

கைவல்லியம்.

கக்ஷிகள்.

தயவுசெய்து ஊன்றிப் படியுங்கள்.

உங்கள் நண்பர்களையும் படிக்கச்சொல்லுங்கள்.

அடுத்தவாரம் நடைப் பெறப்போகும் சட்டசபைத் தேர்தலில் பெரும்பாகம் இரண்டு கக்ஷிகளின் பெயர்களே அடிபடுகின்றன. அவற்றின் பெயர்களுள் ஒன்று ஜஸ்டிஸ் கக்ஷி. மற்றொன்று சுயராஜ்யக் கட்சி. இவை தவிர, சுயேச்சைக்காரர் என்று சிலர் சொல்லிக்கொள்வதும் உண்டு.

சுயேச்சைக் கக்ஷி.

ஆனால், அச்சுயேச்சைக்காரர்களுக்கு மெய்யாகவாவது பொய்யாகவாவது வேஷத்திற்காகவாவது ஒரு ஸ்தாபனமோ கொள்கையோ இல்லாமலும் சுயேச்சை என்றால் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தன்னிஷ்டம்போல்தான் நடந்துகொள்வதைத் தவிர வேறு எவ்வித இயக்கத்திற்கும் கொள்கைக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதே அதன் கருத்து. அல்லாமலும், அவர்களில் (சுயேச்சைக்காரர்கள் என்பவர்களில்) ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதும், குறைந்தது இரண்டு பேராவது சேர்ந்து ஒரு அபிப்பிராயம் கொண்டவர்கள் என்று சொல்வதற்கும் போதுமான ஒற்றுமை இல்லாதவர்கள். அப்பெயர் கொண்டவர்கள் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சி சுயராஜ்ஜியக் கட்சி என்கிற இரண்டு கட்சிக்கும் நல்ல பிள்ளைகளாக நடக்க வேண்டுமென்கிற எண்ணமும் தேசத்தில் எந்தக் கட்சிக்கு செல்வாக்கு இருக்கிறது என்ற உறுதி இல்லாமையும் இதுசமயம் எந்தக் கட்சியின் பெயராவது சொல்லிக்கொண்டால் தங்களுக்கு ஒருசமயம் ஓட்டுக் கிடைக்காமல் போகுமோ என்கிற பயமுமுள்ளவர்களே யாவார்கள். ஆதலால் இப்படிப்பட்ட இவர்கள் ஒரு சமயம் வெற்றி பெற்றால் அநேகமாய்ப் பார்ப்பனர்கள் எல்லாம் பார்ப்பனக் கட்சியாய சுயராஜ்ஜியக் கட்சியிலாவது அல்லது அக்கட்சிக் கொள்கைக்கநுகூலமாகவாவது இருப்பார்களே ஒழிய எவ்விதத்திலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு அநுகூலமாக இருக்கமாட்டார்கள். அதிலுள்ள பார்ப்பனரல்லாதாரும், அது போலவே ஒரு சமயம் வெற்றி பெற்றால் உத்தியோகம் பதவி முதலிய விஷயங்களில் ஜஸ்டிஸ் கட்சியாருடன் பிணங்கிக் கொண்டவர்கள் தவிர மற்றபடி உள்ள பார்ப்பனரல்லாதார் அநேகமாய் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்வதோ அல்லது ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைக்கு அநுகூலமாகவிருப்பதோ ஆகிய இம்மாதிரிதான் இருக்கக்கூடும். நிரம்பவும் ஜாக்கிரதையான சுயேச்சைக் கட்சியார் என்போர் ஜெயித்தவுடன் எந்தக் கட்சி வெற்றி பெறுமோ அதில் சேர்ந்துவிடுவார்கள். ஆதலால் சுயேச்சைக் கட்சி என்பதைப்பற்றி இதுசமயம் நாம் விவரிக்கத் தேவையில்லை.

மற்றக் கக்ஷிகளும்.

ஜஸ்டிஸ் கட்சி சுயராஜ்ஜியக் கட்சி என்கிற இருகட்சிகளைப் பற்றியோ வென்றால் இவ்விரண்டும் தேசத்தின் உண்மையான சுயராஜ்ஜியத்திற்கு அடிப்படையான கொள்கையை உடையவையல்ல. உண்மையான சுயராஜ்ஜியத்திற்கு அடிப்படையான கொள்கைகள் உள்ள மகாத்மாவின் ஒத்துழையாக் காங்கிரஸ் திட்டத்திற்கு இவ்விரண்டு கக்ஷிகளுமே விரோதமாயிருந்தன. ஆனால், ஜஸ்டிஸ் கட்சியானது அக்கொள்கைகளிலும் திட்டத்திலும் நம்பிக்கையில்லாமல் காங்கிரசுக்கு வெளியில் இருந்துகொண்டு அதற்கு விரோதம் செய்து கொண்டிருந்தது. சுயராஜ்யக்கட்சியார் என்பாரோ அப்படிச்செய்யத்தக்க தைரியமில்லாததால் காங்கிரசுக்குள் புகுந்து, கூட இருந்தே காங்கிரசின் குடியைக் கெடுப்பதுபோல் காங்கிரசின் கொள்கைகளைக் கெடுத்து அதன் யோக்கியதையையும் அழித்து அதை வெட்டிப்புதைக்க வேண்டிய நிலைமையில் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். இதன் பலனால் உண்மை சுயராஜ்யத் திட்டம் என்பது இரண்டு கட்சியிலும் இல்லை. இவ்விரண்டு கட்சியும் உண்மை சுயராஜ்யத்திற்கு விரோதமாகவே இருக்கின்றன. அல்லாமலும் அரசியல் சம்பந்தப்பட்ட வரையிலும்கூட இரண்டு கட்சியில் எதையும் நாம் நம்பவோ ஒப்புக்கொள்ளவோ முடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றபடி, மதம், சமூகம், சமுதாயம், சமத்துவம் ஆகிய விஷயங்களில் மாத்திரம் ஒரு கட்சி உரிமை பெறவும் மற்றொரு கட்சி மறுக்கவுமாக இரண்டு கட்சியும் தீவிர கவலை கொண்டு உழைத்துவந்து இருக்கின்றன. அதாவது சுயராஜ்யக்கட்சி என்னும் பார்ப்பனக் கட்சியின் கவலையெல்லாம் மத விஷயத்திலாவது சமுதாய விஷயத்திலாவது சமத்துவ உரிமை மற்ற சமூகத்தாரும் அடையாமலிருக்க வேண்டுமென்று மறுப்பதோடு அதற்கென்றே காங்கிரசின் பெயரையும் உபயோகப்படுத்தி வருகிறது. மற்றொரு கட்சியானது மேற்கண்ட மத சமுதாய சமத்துவ உரிமையையே அடிப்படையாய்க் கொண்டு அதை எவ்வழியிலாவது பெறுவதற்கென்று ஜஸ்டிஸ் கட்சி என்ற ஒரு கட்சியை நிருமாணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இவ்விரு கட்சிகளும் பொது ஜனங்களின் செல்வாக்கைப்பெறவும் ஒரு கட்சி மற்றொரு கட்சிக்குப் பொதுஜனங்களிடம் செல்வாக்கில்லாமல் செய்யவும் கருதியே தங்கள் தங்கள் கட்சிகளின் அடிப்படைத் தத்துவம் "சுயராஜ்யம்" பெறுவது என்று சொல்லிப் பொது மக்களை ஏய்க்கின்றன. பொதுவாய் நோக்குமிடத்து இரண்டு கட்சிகளும் ஒவ்வொரு கருத்தில் சுயராஜ்யத்திற்கு விரோதமான தத்துவமுள்ள கட்சிகள் என்றே சொல்லவேண்டும். "சுயராஜ்யம்" என்பது வந்துவிட்டால் இரண்டு கட்சிக்கும் ஒவ்வொரு வழியில் ஆபத்தாகவே இருக்கும்

சுயராஜ்யக் கக்ஷி.

எப்படியெனில் மகாத்மா கோரும் சுயராஜ்யம் அடைவதோ அதற்குத் தகுதி ஆவதோ நமது பார்ப்பனர்களான சுயராஜ்யக்கட்சியார் ஒருபோதும் சம்மதிக்க முடியாது. ஏனெனில், மகாத்மாவின் சுயராஜ்யத்தில் ஜாதி உயர்வு தாழ்வு இல்லை. ஆங்கிலப்படிப்பு ஆதிக்கத்திலிருக்காது. தற்கால மாதிரியான கோர்ட்டுகள் இரா. இம்மாதிரியான கோர்ட்டுகளுக்கு சதா வேலை இருக்கும்படியான மதுபானம் ஒழிந்து கட்சிப் பிரதிகட்சிகள் விவகாரங்கள் முதலியவைகளும் உண்டாக இடமிருக்காது. கதர் திட்டங்கள் ஈடேறினால் நமது தேசத்து செல்வத்தை கொள்ளைகொண்டு போகத்தக்க அரசாங்கம் நமது நாட்டில் வலுப்பெற்றிருக்க முடியாது. இவைகளெல்லாம் ஒழிந்து போகுமானால், வெள்ளைக்காரர்கள் ஒரு சமயம் நமது நாட்டில் இருக்கமுடிந்தாலும் முடியுமே அல்லாமல், கண்டிப்பாய் நமது நாட்டில் பார்ப்பனர்கள் வாழவே முடியாது.

தீண்டாமை.

எதனாலென்றால், ஜாதி உயர்வு தாழ்வு ஒழிவதால் பார்ப்பனர்களுக்கு சமூக விஷயத்தில் எவ்வித ஆதிக்கமும் யோக்கியதையும் இல்லாததோடு நமது நாட்டில் தற்காலமுள்ள தெருப்பிச்சைக்காரர்களுக்கும், நாடோடிப் பிச்சைக்காரர்களுக்கும் உள்ள மரியாதைதான் இருக்கமுடியும். ஆதலால், ஜாதி உயர்வு தாழ்வை ஒழிக்கப் பார்ப்பனக் காங்கிரசும் பார்ப்பன சுயராஜ்யக் கட்சியும் சம்மதிக்கமாட்டா.

ஆங்கிலப்படிப்பு.

ஆங்கிலப் படிப்பு ஒழிந்தால் பார்ப்பனர்களுக்கு உத்தியோக வாழ்க்கை கொஞ்சமும் கிடையாது. அந்தப்படி பார்ப்பனர்களுக்கு அநுகூலமானதெனக் கருதியே "காங்கிரஸ்" மூலமாகவே வளர்த்துவரப்படுகிறது. எனவே, ஆங்கிலம் ஒழிந்த அன்றே பார்ப்பன உத்தியோக ஆதிக்கமும் ஒழிந்து போவதோடு தூது செல்வதல்லாமல் மற்றெவ்வித உத்தியோகத்திற்கும் அவர்கள் அருகர்களாகமாட்டார்கள்; ஆதலால், ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஒழிக்கவும், பார்ப்பனக் காங்கிரஸ், பார்ப்பன சுயராஜ்யக் கக்ஷி ஒரு நாளும் சம்மதிக்காது.

தற்கால கோர்ட்டுகள்

கோர்ட்டுகள் ஒழிந்தால் பார்ப்பன அதிகாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும், போக போக்கியத்திற்கும் எவ்வளவு ஆபத்து ஏற்படும் என்பதை நாம் சொல்லவேண்டியதே இல்லை படித்தவர்களான பார்ப்பன உத்தியோகஸ்தர்களும் பார்ப்பன வக்கீல்களும் பிழைப்பதற்காக கோர்ட்டுகளேயொழிய பொதுமக்களுக்கு நியாயம் வழங்கவோ விவகாரத்தை ஒழிக்கவோ ஏற்பட்டதல்ல என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆதலால் கோர்ட்டுகள் ஒழியும்படியான சுயராஜ்யம் வா ஒரு க்ஷணம்கூட நமது பார்ப்பனர் காங்

கிரசும், பார்ப்பன சுயராஜ்யக் கட்சியும் சம்மதிக்கவே சம்மதிக்காது.

மதுவிலக்கு.

கோர்ட்டுகள் இருந்தாலும் அதற்கு சதா வேலை கொடுக்கத்தக்க மதுபானம் ஒழிந்துவிட்டால் கலகங்கள் ஏற்படுமா? கக்ஷிப்பிரதிகக்ஷிகள் ஏற்படுமா? மதுபானக்கடை போர்டு பலகைகள் ஒழிந்தால் அந்த நிமிஷத்திலேயே வக்கீல் போர்டு பலகைகளும் எடுபட்டுப்போகும் என்பதும் உத்தியோக அளவும் குறைந்துவிடும் என்பதும் உலகம் ஒப்புக்கொள்ளப்பட்டதுதான். ஆதலால், பார்ப்பனக் காங்கிரசோ பார்ப்பன சுயராஜ்ஜியக் கக்ஷியோ மதுவிலக்கைக் கனவிலும் ஒப்புக்கொள்ளாது.

கதர்.

நமது நாட்டுச்செல்வம் கோடி கோடியாய் வெளிநாட்டுக்குக் கொள்ளைபோய், நமது ஏழை மக்களையும் தொழிலின்றிப் பட்டினி போட்டு வைப்பதற்காதாரமான அந்நியத்துணி, யந்திரத்துணி முதலியவை ஒழியத்தக்க கதர் திட்டம் நிறைவேறினால் கொள்ளைகொள்ளும் அந்நிய அரசாங்கத்தார் ஆதிக்கம் இங்கு நிலைபெறவே பெறாது. அந்நிய அரசாங்கம் இல்லாவிட்டால், பார்ப்பன ஆதிக்கம் நிலைத்திருக்க முடியவே முடியாது; ஆதலால், கதர் திட்டத்தையும் பார்ப்பனக் காங்கிரசோ பார்ப்பன சுயராஜ்ஜியக்கட்சியோ ஒப்புக்கொள்ள முடியவே முடியாது.

ஜஸ்டிஸ் கட்சி

அதுபோலவே பார்ப்பனர் கோரும்படியான சுயராஜ்ஜியம் ஏற்படுவதைப்பார்ப்பனரல்லாத மக்கள் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி ஒருநாளும் சம்மதிக்காது. ஏனெனில், பார்ப்பனர் கோரும் சுயராஜ்ஜியமெல்லாம் முன் சொன்ன மகாத்மா சுயராஜ்ஜியக் கொள்கையை அடியோடு ஒழித்துவிடுவதல்லாமல் பார்ப்பனர்கள் பிழைக்கத் தகுந்தமாதிரி பல உத்தியோகங்களும, பதவிகளும் சம்பாதிப்பதுடன், பார்ப்பனர் ஆதிக்கம் நிலைத்திருக்கத் தக்க திட்டங்களையே வைத்துக்கொண்டிருப்பதும் அல்லாமல் பார்ப்பனரல்லாதார் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் விரோதமாக முட்டுக்கட்டை போடுவதையே கொள்கையாகவும் வைத்திருப்பதால், பார்ப்பனரல்லாத மக்கள் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி இதை ஒருநாளும் அனுமதிக்காது என்று சொன்னோம். ஆனாலும், பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்டதின் பின்னால் பார்ப்பனரல்லாதார் சமூகங்களுக்கு சமத்துவம், சுயமரியாதை என்கிற துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதை பிரத்தியக்ஷத்தில் பார்க்கலாம்.

ஜஸ்டிஸ் கட்சியால் ஏற்பட்டபலன்.

ஜஸ்டிஸ் கட்சி என்று ஒரு கட்சி ஏற்பட்டிராவிடில் ஹைகோர்ட் ஜட்ஜுகளில் இன்றையதினம் ஐந்து ஜட்ஜுகள் அதாவது ஸ்ரீமான்கள் கனம் சி. கிருஷ்ணன் "தீண்டாத வகுப்பைச்சேர்ந்தவர்" தேவதாஸ் கிருஸ்தவர்; வெங்கிடுசுப்பாராவ் ஆந்திர தேசத்து கோமட்டி செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர்; மாதவன் நாயர் மலையாள நாயர் வகுப்பு; சுந்தரம் செட்டியார் தமிழ்நாடு கோமட்டி வகுப்பு; ஆகிய ஐந்து பார்ப்பனரல்லாத கனவான்கள் ஹைகோர்ட் ஜட்ஜுகளாக முடியுமா?

ஜஸ்டிஸ் கட்சி இல்லாத காலத்தில், ஸ்ரீமான் சங்கரன் நாயர் அவர்களை அவரது சாமர்த்தியத்தை மெச்சி சர்க்காரார் ஹைகோர்ட் ஜட்ஜு பதவிக்கு சிபார்சு செய்த காலத்தில் நமது பார்ப்பனர்கள் ஒன்றுகூடி சூத்திரனுக்கு ஹைகோர்ட் ஜட்ஜு பதவி கொடுத்துவிட்டால் தாங்கள் அவரை பிரபுவே என்று கூப்பிடவேண்டி இருக்குமென்றும், அந்த ஜட்ஜு அதிகாரத்தால் பல பார்ப்பனரல்லாதாரை முனிசீப்புகளாக்கிவிடுவார்கள் என்றும் பிறகு அந்த முனிசீப்புகளை தாங்கள் எஜமானே சமூகமே என்று கூப்பிடவேண்டி வருமே என்றும் இவர்கள் செல்வாக்கால் பல பார்ப்பனரல்லாத வக்கீல்கள் தோன்றி தங்கள் தொழிலுக்கு போட்டி போட வந்துவிடுவார்கள் என்றும் கருதி காலஞ்சென்ற கனவான்களாகிய பாஷ்யம் ஐயங்கார், கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலிய பார்ப்பனர்கள் கவர்னரை நேரில் பார்த்தும், சீமைக்குத் தந்திகொடுத்தும், சர். சங்கர நாயருக்குக் கிடைக்கவேண்டிய உத்தியோகத்தை வெகுகாலம்தடைப்படுத்திவைத்திருந்தமை உலகமறிந்த இரகசியம். நமக்கு இந்த இரகசியத்தை ஒரு பார்ப்பனக்காங்கிரஸ் தலைவர் தான் முதன்முதல் சொன்னார்.

வகுப்புவாரி உரிமை.

ஜஸ்டிஸ் கட்சி இல்லாவிட்டால் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் மாதம் 5000, 6000 ரூபாய் சம்பளம் வாங்கத்தக்க நிர்வாக சபையில் மெம்பராக கனம் அபீபுல்லா, கனம் மகம்மது உஸ்மான் ஆகிய இரண்டு மகமதியர்கள் வர முடியுமா? சென்னை சட்ட சபைக்கு மாதம் 2000 ரூ. சம்பளம் வாங்கத்தக்க ஒரு கிருஸ்த்தவர் தலைவராக வர முடியுமா? ஸ்ரீமான்கள் சுப்பராய ரெட்டியார், ராமராய நிங்கார், கே. வி. ரெட்டி நாயுடு, பாத்ரோ, சிவஞானம் பிள்ளை முதலிய பார்ப்பனரல்லாதார்கள் மந்திரிகளாக வர முடியுமா? ஸ்ரீமான்கள் எம். ஸி. ராஜா மருதபிள்ளை ஆர். வீரய்யன், குருசாமி முதலிய (பஞ்சமர் என்று பார்ப்பனர்களால் சொல்லப்பட்ட) கனவான்கள் சட்ட சபை மெம்பராக வந்திருக்க முடியுமா? ஸ்ரீமான்கள் சர். ஆர். வெங்கிட்ட ரத்தினம், சி. ஆர். ரெட்டி முதலியவர்கள் மீ 2000 ரூ. சம்பளம்வாங்கத்தகுந்தகல்விஇலாகா வைஸ் சான்சலராக வந்திருக்க முடியுமா? ஸ்ரீமான் ஜே. வெங்கிட்ட நாராயண நாயுடு கார்ப்பரேஷன் கமிஷனராக வந்திருக்க முடியுமா? ஜஸ்டிஸ் கட்சியே இல்லாதிருக்கும் பட்சத்தில் நமது பார்ப்பனர்கள் ஷை நாயுடுகாரை உத்தியோகத்தில் வைத்திருப்பார்களா? ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் ஏகாதிபத்திய பார்லிமெண்டு மகா நாட்டுக்கு ஆஸ்திரேலியாவுக்குப் போயிருக்க முடியுமா?

சர்க்கார் உத்தியோகம்.

இப்பொழுது அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் இவ்வளவு எண்ணிக்கை உள்ள பார்ப்பனரல்லாத கலெக்டர்கள், ஜட்ஜுகள், சப்ஜட்ஜுகள், முனிசீப்புகள், டிப்டி கலெக்டர்கள் தாசீல்தார்கள், மேஜிஸ்திரேட்டுகள், சூப்பிரண்டுகள், டெப்டி சூப்ரண்டுகள், சர்க்கிள் இன்ஸ்பெக்ட்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், உயர்பதவி இஞ்சினீர்கள், டாக்டர்கள், ஆகிய அதிகாரமும் செல்வாக்குமுள்ள உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைத்திருக்குமா? இன்னமும்,

ஸ்தல ஸ்தாபனம்.

ஜில்லா போர்டு தாலுக்கா போர்டு மெம்பர்கள் பிரசிடெண்டுகள் முனிசிபல் சேர்மென்கள் கவுன்சிலர்கள் பெஞ்சி மேஜிஸ்திரேட்டுகள் யூனியன் சேர்மென்கள் பிரசிடெண்டுகள் ஆகியவர்கள் இவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் வந்திருக்க முடியுமா? ஜஸ்டிஸ் கட்சியே இல்லாதிருக்குமானால்

அரசியல் தலைவர்கள்.

அரசியல் சங்கங்களிலாவது ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, கல்யாண சுந்திர முதலியார், தண்டபாணி பிள்ளை, சிங்காரவேலு செட்டியார், பாவலர், குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை, வெங்கிடுகிருஷ்ண பிள்ளை, ராமசாமி நாயக்கர், சக்கரை செட்டியார், மயிலை ரத்தின சபாபதி முதலியார், முனிசாமி கவுண்டர், அமீத்கான் சாயபு, ஷாபி மகம்மது சாயபு, மாரிமுத்து பிள்ளை முதலிய எத்தனையோ கனவான்கள் தலைவர்களாகவும் தொண்டர்களாகவும் வந்திருக்க முடியுமா? முடியுமென்று சொல்வார்களானால் ஜஸ்டிஸ்கட்சி இல்லாதபோது ஐந்தைந்து வருஷம் ஜெயிலுக்குப் போன உண்மையான தேசபக்தர்களான ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை முதலிய கனவான்கள் உண்மையான தேசத்துரோகிகளான பலபார்ப்பனர்கள் மூட்டை தூக்கியும் அவர்களை சுவாமிகளே என்று கூப்பிட்டுக்கொண்டும் அவர்கள் வாலைப்பிடித்து திரிந்தால் மாத்திரம் வாழும்படியான நிலைமையில் இருக்க வில்லையா? அவர்களை விடவா இந்த கனவான்கள் அதிகமான தேசபக்தி, தியாகம், கஷ்டம், சிறைவாசம் முதலியவைகள் உடைத்தானவர்கள்.

ஒத்துழையா மனப்பான்மை.

ஆனால் இதுகளினால் மக்களுக்கு என்ன லாபம்? தேசத்திற்கு என்ன லாபம்? என்று சிலர் கேட்கலாம் இந்தக் கேள்வி ஒத்துழையா மனப்பான்மை கொண்டவர்கள் கேட்கத் தக்கதுதான். ஆனால், நாம் இவைகளை அவர்களுக்குச் சொல்லவில்லை. இந்த ஸ்தானங்களுக்கும் உத்தியோகத்திற்கும் மதிப்பு கொடுக்கும் பார்ப்பனரல்லாத மக்களுக்கே சொல்லுகிறோம். ஒத்துழையாதாருக்கும் ஒன்று சொல்லுகிறோம். ஜஸ்டிஸ் கட்சி இல்லாதிருந்தால் இந்தப்பதவியும் அதிகாரமும் ஆயிரக் கணக்கான சம்பளமும் பார்ப்பனருக்கு போயிருக்குமா? பார்ப்பனரல்லாதார்களுக்கு கிடைத்திருக்குமா? 10 வருஷ காலமாய் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டு எவ்வளவு கஷ்டம், நஷ்டம், சூழ்ச்சியும் விபூஷணாழ்வார்கள் துரோகமும் கோடாரிக் காம்புகள் கொடுமையும் ஆகிய முதலியவை மலிந்து அதன் கடமையைச்செய்யவிடாது தடுத்தும் இது

[இதன் தொடர்ச்சியை 11ம் பக்கம் பார்க்க.]

வேலைத் திட்டம்.

—:o:—

தேர்தல் தேதி நெருங்கிவிட்டது. பாக்கியிருக்கும் ஒரு வாரத்திற்குள் தேர்தல் முழக்கம் எவ்வளவு வலுத்த போதிலும் இவ்வாரக் கடைசியில் அது அடங்கியே தீரும். ஆனால் அபேக்ஷகர்களும், அவர் தம் பிரசாரகரும், வாக்காளர்களும் நவம்பர்-மீ 8உ-யை நோக்கிய வண்ணமாயிருக்கிறார்களேயொழிய, அத்தேதிக்குப் பிறகு என்ன நடக்குமென்பதைப் பற்றி யோசித்தவர்களல்லர். அபேக்ஷகர்கள் எப்படியாவது வாக்காளர்களை ஏமாற்றித் தமக்கு சட்ட சபைப் பதவி கிடைத்து விட்டால் போதுமென்றிருக்கிறவர்களாதலால் தேர்தலுக்குப் பிறகு இவர்களது எண்ணம் விருந்துகளிலும், அதிகாரிகளிடம் கைகுலுக்கி உறவாடுவதிலுமே நாட்டஞ் செல்லும். இவர்களில் ஒரு சிலர் வீரப்பிரதாபத் தீர்மானங்கள் கொண்டு வருவதிலும், அவை அங்கீகரிக்கப்படவில்லையானால் சட்ட சபையினின்றும் வெளியேறி மறுபடியும் உட்புகுதலிலும் காலத்தைக் கழித்து வரலாம். ஆனால் இன்று வாக்காளரிடம் சொல்லும் ஆசை வார்த்தைகளை நிறைவேற்ற வேண்டுமென்கிற கவலை தற்காலம் அபேக்ஷகராக நிற்பவரில் எவருக்கும் நவம்பர் 8-ந் தேதிக்குப்பிறகு ஏற்படாது.

ஓட்டுப்பிரசாரகர் நிலையைப்பற்றி யோசித்தும் பலனில்லை. சில சமயங்களில் ஊரில் காலரா, அம்மை வந்தால் டாக்டர்களுக்கு ஆயிரக் கணக்கான செல்வம் சேர்ந்துவிடும். ஊரார் க்ஷேமமாயிருந்தால் இவர்களை தரித்திரம் பிடுங்கித் தின்னும். அதேமாதிரி தேர்தலென்னும் கொள்ளை நோய் வருங்காலத்து பிரசாரகர் சுருட்டிக்கொண்டது லாபம். தேர்தல் தீர்ந்த பிறகு பிழைப்புக்கு வேறு வழி தேடாவிட்டால் இவர்கள் பாடு திண்டாட்டந்தான். ஆதலால் இவர்கள் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் முதுமொழியைப் பின்பற்றி நடந்து வருகிறார்கள்

வாக்காளரில் சிலருக்கு 5, 10ம் சிலருக்கு 2, 1மாவது கிடைக்கலாம். ஆனால் இதுவந்து அவர்கள் பஞ்சம் நீங்கப் போவதில்லை. ஆகையால தேர்தலுக்கு முன்னும் பின்னும் இவர்களுடைய நிலையும், இவர்களைச் சார்ந்த, வாக்குரிமையும் பெறாத கோடிக் கணக்கான பொது ஜனங்களினுடைய நிலையுந்தான் கவலைக்கிடமாயிருக்கிறது. ராஜ்ய கக்ஷிகள் இதுவரையில் இவர்களை ஏமாற்றி வந்திருக்கின்றனவேயொழிய இவர்கள் விடுதலைக்கு மார்க்கம் தேடினதில்லை. தேர்தல் முடியும் வரையில் இவர்கள் ஓட்டுப் பிரசாரகர் வலையில் சிக்கியிருப்பார்களாதலால் இவர்களது நன்மையைக் கோருகிறவர்கள் தேர்தல் முடிந்த பிறகே இவர்களையணுக வேண்டும்.

இந்திய தேசம் அடிமைக் குழியில் ஆழ்ந்து கிடப்பதற்கு முக்கிய காரணம் மக்களில் பிறவியிலேயே ஏற்றத்தாழ்ச்சியுண்டென்கிற மூட நம்பிக்கையேயாகும். இம்மடமையானது ஆதிகாலத்திலேயே நமக்கு புகட்டப்பட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம்முடைய ரத்தத்தில் ஊறியிருக்கிறது. இந்த அஞ்ஞானம் தற்காலத்து இந்தியரின் பிறவிக் குணமாக விளங்குகிறது. "காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாய்த்" தெரிவது போல நம் பிறவியடிமைகளுக்கு உலகமே ஜாதி மயமாய்த் தோன்றுகிறது. படிப்படியாக அமைக்கப்பட்டிருக்கும் ஜாதிகளில் எவன் உண்மையோடும், பிரயாசையோடும் சகலருக்கும் முக்கியமான தொழில் செய்கிறானோ அவனைச் சகலருக்கும் கடையான ஜாதியிலும் எவன் அசத்தியத்தோடும், பலாத்காரத்தோடுமுள்ள தொழில் செய்கிறானோ அவனை உயர்ந்த ஜாதியிலுமாக வைக்கப்பட்டிருக்கிறது. மாடுகளை மேய்த்து, நிலத்தையுழுது, அறுவடை செய்பவன் பறையன்; அவனில்லாவிட்டால் வேறு வேலை ஓடாது; அவனே சமூகத்திற்கு ஜீவதாது; ஆகையால் அவனை ஜாதியென்னும் மாய ஏணியில் கடைசிப் படியில் உட்கார வைத்திருக்கிறார்கள். இப்பறையர்களிடம் வேலை வாங்கி ஜீவனம் செய்பவன் வேளாளன்; இவனை சூத்திரனென்று இரண்டாவது படியில் வைத்திருக்கிறார்கள். வேளாளன் உற்பத்தி செய்யும் விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி ஜாஸ்தி விலைக்கு விற்றுக் கொள்ளை கொள்பவன் வைசியன்; அவனை மூன்றாவது படியில் வைத்திருக்கிறார்கள். இவ்வைசியனை மிரட்டித் தண்டத் தீர்வை வாங்குகிறவன் க்ஷத்திரியன்; இவனை நான்காவது உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த க்ஷத்திரியனை ஏமாற்றி காவிலுக்கு மோஹினி என்றும், பிதுர்களுக்கு சிரார்த்தமென்றும பணம் பறிக்கும் பார்ப்பனனை எல்லோருக்கும் மேலான உச்சஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த விபரீத அமைப்பைக் கண்டு உலகம் பொறுக்காமல் வெள்ளையர்கள் வந்து புகுந்து நம்மை அடிமைப்படுத்தினார்கள். ஜாதியென்னும் இந்த விபரீத ஏணியை அந்நியரும் உபயோகப்படுத்திக்கொண்டு அதில் பிராமணருக்குமேல் ஒரு படி உயர உட்கார்ந்துகொண்டு பிராமணர் மூலம் தமது ஆதிக்கத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். பிராமணனும் தனக்குக்கீழுள்ள நான்கு ஜாதியாரையும் அடக்கி ஜீவிப்பதற்காகத் தன்னுடைய நிலையைக்காப்பாற்றிக்கொண்டு வெள்ளையருக்கு அடிபணிந்து ஊழியம் செய்து வருகிறான். இந்திய பொதுமக்கள் விடுதலையடைய வேண்டுமென்றால், இந்த விபரீத ஏணியை முறித்தெறிய வேண்டுமல்லவா? மக்களில் ஏற்றத் தாழ்வுண்டென்னும் அஞ்ஞானம் நம்மைவிட்டொழிந்தாலொழிய இவ்வேணியின் ஆதிக்கமும் நமது அடிமைத்தனமும் வளர்ந்தே தீரும். உண்மை தேசபக்தர்களின் கடமை தற்சமயம் பொது ஜனங்களிடம் உள்ள இந்த அஞ்ஞானவிருளைப் போக்கி மக்கள் பிறவியில் சகோதரர் என்னும் கொள்கையைப் பரப்ப வேண்டும். தேர்தலுக்குப் பிறகு ஜனங்களிடை நாம் செய்யக்கூடிய உண்மை "வேலைத்திட்டம்" இதுவேயாகும்.

சேது.

ஓர் பகிரங்கக் கடிதம்.

சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர்
ஸ்ரீமான் வேணுடையாக் கவுண்டர்
அவர்களுக்கு.

அன்பும் அருளுமுடைய பெரியீர்!

வணக்கம்.

தாங்கள் இம்முறை சென்னைச் சட்ட சபைக்குப்போக முன் வந்ததும, தங்கள் பொருட்டு ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் விலகி நிற்பதும், யான் விரும்பியவறே ஆயின. தங்களுக்கு வெற்றி கைகூடுமாறு எனதாண்டவனை வழுத்துகிறேன்.

நிற்க, "பிராமணர்" என்று சொல்லப்படும் ஆரிய பார்ப்பனர்களாலே நம்முடைய தமிழ்த் திருநாடும், மொழியும், கலையும், நாகரீகமும் பாழடைந்தனவென்பதைச் சரித்திர பூர்வமாகக் காணலாம். பார்ப்பனர் சுயநலப்புலிகள்; பிறவியில் தாங்கள் உயர்ந்தோர், மற்றனைவரும் தாழ்ந்தோர் என்றெண்ணி, நம்மைப் பண்டுதொட்டு தாழ்த்தி, மிதித்து நசுக்கி வந்தவர்கள் என்பதை அறியீர்களா?

பார்ப்பன மோகம், நம்மைவிட்டு என்றகலுமோ, அன்றேதான் யாம் கதிமோட்சமடைவோம்; சுயமரியாதை அடைவோம்; சுயராஜ்ஜியம் அடைவோம். ஆதலின் தாங்கள் எண்ணிப்பார்த்து பார்ப்பன விலங்கிலிருந்து இன்றே விடுபடுமாறு வேண்டுகிறேன்

பார்ப்பனர் நெட்டுருப்போடும் சக்தி படைத்தவர். ஆதலால் ஆங்கில மொழியை எளிதில் கற்று, பல அரசாங்க உத்தியோகங்கள் வகித்து நம்மை அடக்கினர். போதாக்குறைக்கு, நம்மை மூட நம்பிக்கைகளுக்கு ஆளாக்கும் பழைய ஏடுகள் பல, அவர்களிடமிருக்கின்றன.

காங்கிரசென்பது பார்ப்பனர்களால் காணப்பட்ட சதியாலோசனைச் சபை. மகாத்மா காந்தி, ஒரு சமயம் இக்காங்கிரசைப் புனிதமாக்கினார். யானும், என்போன்றவர்களும், பெரியோரும், பெண்டிரும், காந்தி சொற்கேட்டு சிறைக்கேகினோம்.

யாம் செய்த தியாகத்தைப் பார்ப்பனர் பறை சாற்றிக்கொண்டு, இன்றையதினம் காங்கிரசை மாசுபடுத்தி அதன் மூலம் தங்களது ஆதிக்கம் தேடுகின்றனர். நாளை காங்கிரஸ் தலைமை வகிக்கப்போகும் பார்ப்பனர் தியாக நாட்களில், சோதனைக் காலத்தில், உல்லாசமாக, அட்டகாசமாக, அரசாங்க பீடத்திருந்து அமுல் நடத்தி வந்தவர். மந்திரி பதவி கிடைக்காமற் போனமையால், காங்கிரசில் குதித்து, அப்பதவியையும், அதற்கு மேம்பாடான பதவிகளையும், தமக்கும், தம்மினத்தவர்க்கும், தேடியளிக்கப் பிரயத்தனம் செய்துவருகிறார். ஆகலின் தாங்கள் இக்கொடிய காங்கிரசினின்றும், இப்பார்ப்பன சூழ்ச்சிகளினின்றும் இன்றே, இன்றே தப்பி விலகுமாறு பெரிதும் வேண்டுகிறேன். தேர்தலில் தங்களுக்கும், நமது நலனுக்குழைக்கும், நந்தமிழ் நாட்டு வேளாளர்களான ஸ்ரீமான்கள் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் ஆகிய மூவர்களுக்குமே நமது வோட

[இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க]



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-௵ ஐப்பசி-மீ 15-௳

பார்ப்பனரின் கனவு பலிக்காது.

வரப்போகும் தேர்தலில் பார்ப்பனர்களின் வெற்றியும் தோல்வியும் ஸ்ரீமான்கள் பனகால் ராஜா, ஏ. ராமசாமி முதலியார் ஆகிய இருவர்களின் வெற்றியையும் தோல்வியையும் பொறுத்திருப்பதாகவே நமது பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கனவு கண்டுகொண்டு லக்ஷக்கணக்கான ரூபாய்களையும், சர்வப் பிரயத்தனத்தையும் இதற்காகவே செலவழித்து வருவதோடு பஞ்ச தந்திரங்களையும் செய்து வருகிறார்கள். அல்லாமலும், மற்ற இடங்களிலும் தங்கள் கட்சி ஆட்களே வெற்றி பெறுவதற்காக ஓட்டர்களை ஏமாற்றும் பொருட்டு பனகால் ராஜா தேர்தலில் தோற்றுவிட்டாரென்றும், ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வெற்றி பெற்றுவிட்டாரென்றும், மற்றும் பல விடங்களில் பார்ப்பனக் கட்சியே வெற்றி பெறுமென்றும், ஆதலால் அல்லாடி அவர்களே அடுத்த தடவைக்கு முதல் மந்திரியாக நியமிக்கப்படப் போகிறாரென்றும் பொய்க் கட்டுகள் கட்டிவிட்டுப், பஞ்சாங்கப் பார்ப்பனர், காபி ஓட்டல் பார்ப்பனர், வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர், பரிசாரகப் பார்ப்பனர் முதல்கொண்டு எல்லாப் பார்ப்பனர்களும் திண்ணைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இவ்விதத் திண்ணைப் பிரசாரங்களுக்கெல்லாம் பார்ப்பனரல்லாத ஓட்டர்கள் மாறி விடுவார்கள் என்று நினைப்பது கனவாகவே முடியும்.

தற்காலம் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் தேர்தல் முடிவுகள், சென்ற தேர்தலில், அதாவது சென்ற மூன்று வருஷ காலமும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு எவ்வளவு பலமிருந்ததோ அதைவிட அதிகமாகவே குறிப்பிடத்தக்க பலமிருக்குமென்றே சொல்லத்தகுந்த மாதிரிக்கே வெற்றி கிடைக்குமென்றே சொல்லலாம். உதாரணமாக ஆந்திர மாகாணத்தில் எவ்வளவு குறைந்தாலும் சென்ற வருஷத்தைவிட சுமார் 10 ஸ்தானங்களுக்குக் குறையாமலே ஜஸ்டிஸ் கட்சிக்கு முன்னிலும் அதிகமான நபர்கள் வெற்றி பெறுவார்கள் என்கிற உறுதி ஏற்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டிலும் ஆந்திர நாட்டைப்போல் அவ்வளவு அதிகமான நபர்கள் முன்னிலும் அதிகமாய் வெற்றி பெறுவது சந்தேகமேயானாலும், குறைந்தது 3, 4 நபர்களாவது அதிகமாக வெற்றி பெறுவதில் ஆக்ஷேபணையில்லை. உதாரணமாக கோயமுத்தூர் ஜில்லாவில் சென்ற தேர்தலில் சுயராஜ்யக் கட்சிக்கு மூன்று மெம்பர்கள் அநுகூலமாய் வெற்றி பெற்றார்கள். இவ்வருஷமோ ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் ஒருவர்தான் பார்ப்பனக் கட்சியின் சார்பாக நிற்கிறார். அவருக்கு வெற்றி கிடைப்பது இப்போது பெரிய சந்தேகத்தில் வந்துவிட்டது. மீதி இரு ஸ்தானங்களில் வெற்றி பெறுகிறவர்களில் ஒருவர் கண்டிப்பாய் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர். மற்றவரும் ஜஸ்டிஸ் கட்சி கொள்கையையே உடையவர். எப்படியானாலும், சுயராஜ்யக் கட்சி என்கிற பார்ப்பனக் கட்சிக்கு 2 ஸ்தானம் இழக்கப்பட்டுப் போய்விட்டது என்பதும், ஒன்று கஷ்டத்தில் இருக்கிறது என்பதும், ஜஸ்டிஸ் கட்சி என்கிற பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு 2 ஸ்தானம் கூடுதல் என்பதும் உறுதியாகிவிட்டதென்றே சொல்லலாம்.

இதுபோலவே தஞ்சைஜில்லாவிலும், சென்றதேர்தலில் பார்ப்பனக்கட்சிக்கே மூன்று ஸ்தானங்களும் அநுகூலமாக வெற்றி பெற்றிருந்தன. இவ்வருஷம் ஒரு ஸ்தானமாவது கிடைக்குமா வென்பதே சந்தேகமாயிருக்கிறது. அந்த ஜில்லாவிலுள்ள மூன்று ஸ்தானங்களுக்கு பார்ப்பனக் கட்சியின் சார்பாய் நிறுத்தப்பட்டிருந்த மூன்று கனவான்களுமே தங்களுக்குக் கிடைப்பது சந்தேகம் என்பதாய்க் கருதி தனித்தனியாய் கட்சியின் பெயரை விட்டுவிட்டு பிரசாரம் செய்ய வாரம்பித்து விட்டார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரவர்கள் தேர்தல் அறிக்கையில், காங்கிரசைப்பற்றியாவது சுயராஜ்யக் கட்சியைப் பற்றியாவது ஒரு வார்த்தை கூட குறிப்பிடவேயில்லை. தவிர பார்ப்பனக் கட்சித் தலைவர்களான ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் முத்தையா முதலியார் அவர்களின் பேரில் சந்தேகப்பட்டுக்கொண்டு ஸ்ரீமான்கள் சிவசுப்ரமணிய அய்யருக்கும், மருதவாணம் பிள்ளைக்குமே ஓட்டுப்போடும்படி. கேட்டு வருகிறார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் தனக்குக் கட்டுப்பட்ட இடத்தில் தனி ஓட்டுகளே கிடைக்கும்படியாகவும் மற்றவிடத்தில் தனக்கு ஒரு ஓட்டு போட்டுவிட்டுமற்றவைகளைவேறுயாருக்குவேண்டுமானாலும்போட்டுக்கொள்ளுங்கள்என்றும் வேலைசெய்து வருகிறார். அவர் வெற்றி பெற்றாலும் கண்டிப்பாய்ப் பார்ப்பனர் கக்ஷியுடன் சேருவதில்லையென்றே சொல்லிவிட்டார். மற்ற இருவர்களோ ஸ்ரீமான் குன்னியூர் அய்யர் என்கிற கனவான் தனக்கு ஆனாலும் சரி ஆகாவிட்டாலும் சரி என்கிற கவலையற்று இருக்கிறார். ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளையோ சென்ற வருஷத்தில் செலவு செய்ததில் 4ல் ஒரு பாகம்கூட இவ்வருஷம் செலவழிக்க மனமில்லாதவராய் நடக்கிறபடி நடக்கட்டும் என்றிருக்கிறார்கள். மற்றபடி, பார்ப்பனரல்லாத கட்சியைச் சேர்ந்த இரண்டு கனவான்களும் அதாவது ஸ்ரீமான்கள் பூண்டிவாண்டையார், நெடும்பலம் முதலியார் ஆகிய இருவர்கள் ஒற்றுமையாகவே வேலை செய்கிறார்கள். எவ்விதத்திலும் இவ்விருவருக்கும் வெற்றிக்குறிகள் வெளிப்படையாயிருக்கின்றன. ஏனெனில் இவ்விருவர்களும் மற்ற அபேக்ஷகர்களைவிட பணக்காரர்கள். அதாவது ஒருவருக்கு சுமார் 1,000 வேலியும் மற்றவருக்கு சுமார் 500 வேலியும் நிலம் உண்டு. அல்லாமலும், சென்றதேர்தலில் செலவுசெய்து சலிப்படையாதவர்கள். தங்கள் தங்களுக்குக் கட்டுப்பட்டது என்று சொல்லும்படியாக தனித்தனியாய் 2, 3 தாலூகாக்களில் செல்வாக்குள்ளவர்கள். தனி ஓட்டுகள் வேண்டுமானால் 10,000 கணக்கான ஓட்டுகள் பெறக் கூடியவர்கள். அல்லாமலும், நமது பார்ப்பனர்களின் வார்த்தையைக் கேட்டு அரசியல் கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு இதுவரை எவ்வித நாணயக்குறைவான பெயரும் அடைந்தவர்களல்ல. தஞ்சை ஜில்லாவிலுள்ள பார்ப்பனரல்லாதார் கட்சியைச்சேர்ந்த ஜில்லா போர்டு பிரசிடெண்டு, நான்கைந்து தாலூகா போர்டு பிரசிடெண்டுகள்மற்றும்பலபெரியகனவான்கள் ஆகியவர்கள் எல்லாம் இவ்விருவர்களுக்கே வேலை செய்கின்றார்கள். ஆதலால் இவர்களுக்கு வெற்றி கிடைப்பது உறுதியென்றே சொல்லிவிடலாம். அதிலும், ஸ்ரீமான் வாண்டையாருக்கு இப்பொழுதே எழுதிவைத்துவிடலாம். சுயேச்சை வாதியென்று சொல்லப்பட்ட ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை அவர்களுக்கும் வெற்றிக் குறிகள் பலமாகக் காணப்படுகின்றன. பார்ப்பனரல்லாதார் கட்சி அபேக்ஷகர்களும் தங்களுக்கு இரண்டு ஓட்டுப்போக பாக்கியை ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளைக்கே போடும்படி பிரசாரம் செய்கிறார்கள். ஸ்ரீமான்கள் மருதவாணம் பிள்ளை, குன்னியூர் அய்யர் ஆகிய இருவர்களும் தங்களுக்கு இரண்டு ஓட்டுப்போட்டு மீதியை ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை அவர்களுக்கே போடும்படி சொல்லுகிறார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளைக்கு அநுகூலமாயிருப்பதன் மூலம் அவருடைய சகாயமும் பெறலாமென்று கருதி அவருக்கு அநுகூலமாயிருக்கிறார். ஆகவே, பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு இரண்டு ஸ்தானமும் சுயேச்சை கட்சியென்கிற ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளைக்கு ஒரு ஸ்தானமும்தான் கிடைக்கும். இதில் ஏதாவது தவறும்பட்சத்தில் ஒரே ஒரு ஸ்தானம்தான் மாறலாம். அதுவும் இப்போது சுயராஜ்யக்கட்சி என்னும் பார்ப்பனக்கட்சியிலிருந்து பிரிந்திருக்கும் ஸ்ரீமான் முத்தையா முதலியாருக்குத்தான் கிடைக்கலாம். அது தவறும்பக்ஷம் ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளைக்குக் கிடைக்குமேயல்லாமல் கண்டிப்பாய் அய்யருக்குக் கிடைக்காது. அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை பார்ப்பனரல்லாதார் என்

கிற வகுப்பு உணர்ச்சி அவ்வளவு நன்றாக விளங்குகிறது. ஆதலால் சென்ற வருஷத்தைவிடப் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அதிக ஸ்தானங்களே கிடைக்கும்.

இதுபோலவே மற்ற ஜில்லாக்களிலும் இதை அநுசரித்தேதான் இருக்கிறது. அல்லாமலும் சென்ற இரண்டு தேர்தல்களிலும் பார்ப்பனர்கள் வார்த்தையை நம்பி ஏமாந்து போனவர்களும், தங்கள் நன்மையையும் நல்ல பேரையும் கெடுத்துக்கொண்ட பலருக்கு இவ்வருஷம புத்தி வந்துமிருக்கிறது. ஆதலால், எவ்வகையிலும் பார்ப்பனக் கட்சி தலையெடுப்பதற்கு இடமில்லாமல் இருப்பதோடு பார்ப்பனரல்லாதார் கட்சி மேலும் மேலும் உரம் பெற்று வருகிறது.

தவிர, பனகால் ராஜா விஷயத்தில் வெற்றிக்கு எவ்விதத்திலும் சந்தேகமேயில்லை. இதுவரை பதிவு செய்து அனுப்பியிருக்கும் ஓட்டுகளிலேயே மெஜாரிட்டி ஏற்பட்டிருப்பதாகவே தக்க ஆதாரத்தின் மீது நம்பத்தகுந்த இடத்திலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாரைப் பற்றியோவென்றால், வெற்றியைப்பற்றி எவ்விதத்திலும் ஆக்ஷேபணை சொல்வதற்கே சிறிதுமிடமில்லை. ஆனால், பார்ப்பனர்களுக்கு, சூழ்ச்சியும், தந்திரமும், வஞ்சகமும் கூடிய பிரசாரங்கள் செய்வதற்கு பல வழிகளிலும் சவுகரியமிருந்தது. அதுபோன்ற சவுகரியங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை. உதாரணமாக பார்ப்பனர் தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்று தெரிந்தாலும் பனகால் ராஜா ஸ்ரீமான் ராமசாமி முதலியார் போன்றவர்கள் வெளியிடங்களுக்குப் போய்ப் பிரசாரம் செய்வதற்கில்லாமல் அவர்கள் தொகுதிகளில் எதிர் அபேக்ஷகர்களை நிறுத்தி இவ்விருவர்களையும் அவரவர்கள் தொகுதியிலேயே கட்டிப் போட்டு விட்டார்கள். ஆனால் தாங்கள் மாத்திரம், அதாவது ஸ்ரீமான்கள் சத்திய மூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார் இருவரும் தங்களது சூழ்ச்சிகளால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கத் தக்கமாதிரி ஏற்பாடு செய்து கொண்டு மற்றத்தொகுதிகளில் பார்ப்பனரல்லாதாருக்கு எதிராய் பிரசாரம் செய்யத்தக்கஇடம் செய்து கொண்டார்கள். அல்லாமலும், தேர்தலுக்கு சவுகரியமாய் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள இலாக்கா உத்தியோகஸ்தர்களை ஆங்காங்கு யாற்றி பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் இரகசிய பிரசாரம் செய்ய சவுகரியம் செய்து கொண்டார்கள். தவிர, செலவு செய்யவும், காங்கிரஸ் பணம், மடாதிபதிகள் பணம், மகந்துக்கள் பணம் முதலிய பல பொதுப் பணங்கள் லட்சக்கணக்காய் இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. செல்வாக்கு பெற்று விட்ட பத்திரிகைகளாகிய "இந்து" "சுதேசமித்திரன்" "சுயராஜ்யா" முதலியபத்திரிகைகளும் அவர்கள் சுவாதீனத்தில் இருக்கின்றன. மற்றும், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பார்ப்பன பத்திரிகையும் இருக்கிறது. பார்ப்பனரல்லாத பல பத்திரிகைகளையும் விலை கொடுத்தும் மிரட்டியும் கட்டிப்போட்டு விட்டார்கள். இவ்விரண்டிலும் கட்டுப்படாத பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளிலும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பார்ப்பன ஒற்றர்களை அனுப்பித் தங்களுக்கு அநுகூலமாய்த்திருப்பி விட்டார்கள். மிகுதியும் பார்ப்பனரல்லாதார் கஷ்டநஷ்டங்களாலும் தியாகத்தாலும் செல்வாக்கு பெற்று விட்ட காங்கிரஸ் முதலிய தேசீய இயக்கங்கள்என்பனவற்றையும் கைப்பற்றி, மற்றவர்கள் உள்ளே நுழையாதபடி முற்றுகைபோட்டுக் கொண்டார்கள். காங்கிரசின் மூலம் பொது ஜனங்களுக்கு அறிமுகமான தொண்டர்களையும் அவர்களது வயிற்றுக் கொடுமையின் காரணமாக பலவழிகளிலும் தங்களுடைய அடிமைகளாக்கிக் கொண்டார்கள். இனியும், இதில்எழுதத் தகாத பல வழிகளிலும்செல்வாக்குள்ளவர்கள்பிரபலஸ்தர்கள் என்கிறபேர்வழிகளையும் உள்சட்டப்

ஜஸ்டிஸ் கக்ஷி கனவான்களே
நீங்கள் உண்மையாய் பார்ப்பனரல்லாதாரின்
நண்பர்களானால் உடனே
கதரை உடுத்துங்கள்
அதுதான் உங்களுக்கு பரீக்ஷை.
கதர் தரித்திரத்தைப்போக்கி எல்லோருக்கும் விடுதலை அளிக்கும்
"காங்கிரஸ் சுயராஜ்ஜியம்"
பார்ப்பனருக்கு மாத்திரம் உத்தியோகமும் ஆதிக்கமும் அளிக்கும்.

பையில்போட்டிருக்கிறார்கள். இவ்வளவு சவுகரியங்கள் பார்ப்பனர்களுக்கு இருந்தும் ஒரு மயிர்க்காலாவது தங்கள் தங்களது நிலையை இருப்பிடத்தைவிட்டு அசைக்க முடியாமல் போய்விட்டதோடு பார்ப்பனரல்தார் எவ்வளவோ முன்னுக்குவர சவுகரியமும் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது நமது நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதென்றேதான் சொல்லவேண்டும்.

ஆதலால், பார்ப்பனர்களின் திண்ணைப் பிரசாரத்தை யாரும் நம்பி மோசம்போக வேண்டாம் என்று வேண்டிக்கொள்வதோடு எவ்விதத்திலும் பார்ப்பனர் தங்கள் கட்சி வெற்றிபெறும் என்று காணும் அவர்களது கனவு பலிக்காதென்றே உறுதி கூறுவோம்.

கல்பாத்தி.

மலையாளத்தைச் சேர்ந்த பாலக்காட்டு கல்பாத்தி ரோட்டுகளில் ஈழவர் தீயர் சகோதரர்கள் நடக்கக்கூடாது என்கிற உபத்திரவம் இருந்து வருவதும், அதில் பிரவேசிக்கப் பல வருஷகாலமாய் பலர் முயற்சித்து வருவதும் வாசகர் அறிந்திருக்கலாம். இதை உத்தேசித்து சென்னை சட்ட சபையில், "பொதுத் தெருக்களில் யாரும் நடக்கலாம்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியதும் ஞாபகமிருக்கலாம். அத்தீர்மானம் அமுலுக்கு வருவதற்கில்லாமல் வேலையிருந்தால்தான் போகலாம் என்று சட்ட மெம்பர் வியாக்கியானம் செய்ததும் ஞாபகமிருக்கலாம். ஆனால் சென்ற வருஷங்கூட தாழ்த்தப்பட்ட கனவான்களுள் பலர், செல்ல முயற்சித்ததும் அவர்களுக்கு 144 உத்திரவு போடச் செய்ததும் ஞாபகமிருக்கலாம். மற்றும் சில சமயங்களில் சிலர் மீறிச் சென்று அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தப்பட்டு கோர்ட்டுகளில் விசாரணை ஆகி விடுதலை ஆனதும் ஞாபகமிருக்கலாம். மற்றொரு சமயம் ஆரியசமாஜி என்கிற முறையில் ஒருவர் சென்றபொழுது அவரைத் தடுத்து உபத்திரவப் படுத்தியதற்காகச் சில பார்ப்பனர்கள்பேரில் நடவடிக்கை நடத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதும் ஞாபகமிருக்கலாம். இப்போது, இம்மாதம் கல்பாத்தியில் ரதோற்சவமானபடியால் மறுபடியும் ஈழவர்கள் எங்கு பிரவேசித்துவிடப் போகிறார்களோ என்பதாக நினைத்து மலையாளப் பார்ப்பனர்கள் இப்பொழுதிருந்தே வேண்டிய சூழ்ச்சிகள் செய்து வருவதாய்த் தெரிகிறது.

அங்குள்ள ஒரு பார்ப்பன மாஜிஸ்ட்ரேட்டு இப்போதிருந்தே 144 போட ஆசையுள்ளவராக இருக்கிறார். முடிவு என்னவாகுமென்பது தெரியவில்லை. "பார்ப்பனரல்லாதார் நன்மை காங்கிரஸ் மூலம்தான் ஏற்படும்" என்று சொல்லும் காங்கிரஸ் பார்ப்பனர்கள், இது சமயம் "திருடனைத் தேள் கொட்டியதுபோல்" மௌனம் சாதிக்கிறார்கள்.

பார்ப்பனரல்லாதார் கட்சியும் அவர்களுடைய பொது மக்கள் உணர்ச்சியும் இவ்வளவு பலப்பட்டிருக்கிறபோதும், சட்டங்களும் அநுகூலமாயிருக்கிறபோதும், தேர்தல் சண்டை இருக்கிறபோதும் தெருவில் நடக்கும் உரிமை கூட இல்லாமல், நம்மைக்கொடுமைப் படுத்தத் தயாராயிருப்பார்களானால், இவர்கள் கைக்கு ராஜ்யமே வந்துவிட்டால் நம்மை என்ன செய்யமாட்டார்கள் என்பதை நன்றாய்யோசித்துச் சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனர்களுக்குத் தக்க புத்தி கற்பிக்கக் கோருகிறோம்.

ஸ்ரீமான் நாயக்கர்.

சேரமாதேவியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சந்தர்ப்பத்தை ஒட்டி, ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் எஸ். இராமநாதன் அவர்களும் 28உ இரவு சேரமாதேவிக்கு புறப்பட்டிருக்கிறார்கள். அவ்விடத்திய அலுவல் 29உ பார்த்துவிட்டு 30உ ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களுடன் திருநெல்வேலி ஜில்லாவில் சுயமரியாதைப்பிரசார சம்பந்தமாய் இரண்டொரு உபந்நியாசங்கள் புரிந்துவிட்டுத் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை வாக்கில் ஈரோடு வந்து சேர்வார்கள்.

அய்யங்காரின் சூழ்ச்சி.

ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமண அய்யங்கார் சட்ட சபை எலெக்ஷனுக்காக தற்சமயம் பிரசாரம் செய்துவருகிறதில், தான் மேல்பவானி பிராஜக்ட்டுக்கு அதிக முயற்சி செய்தவர் என்று பெரிய அச்சு நோட்டீசுகள் போட்டு பல இடங்களில் ஒட்டவைத்து வருகிறார். ஷெயார் இவ்விதமாக உண்மையல்லாத விஷயத்தில் வீணாக தற்புகழ்ச்சி செய்துகொண்டு, சமயத்துக் கேற்றவாறு தம்முடைய அபிப்பிராயங்களை மாற்றி ஓட்டர்களை ஏமாற்ற முயலுவது நியாயமாகவில்லை.

அவனாசி தாலூகா அன்னூரில் ஷெ பிராஜக்ட்டு விஷயமாய் கனம் போர்டு மெம்பர் மெக்மெகேல் துரையவர்கள் வந்து அந்த பிராந்தியத்துக் குடித்தனக்காரர்களை விசாரித்தபோது, ஸ்ரீமான்கள் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரும், டி. ஏ. ராமலிங்க செட்டியாரும், அவ்விடத்திற்கு குறித்த காலத்திற்குச் சற்று காலஞ்சென்றுவர ஏற்பட்டதால் மேற்படியார்கள் வராததற்கு முன்னாலேயே ஸ்ரீமான் அய்யங்கார், மேல்பவானியைத் தாக்கியும், கீழ் பவானி பிராஜக்டை ஆதரித்தும் பேசியது அநேகருக்குத் தெரியும். இவ்விதம் நூற்றுக்கணக்கான ஜனங்களின் மத்தியில் பேசிவிட்டு, இப்போது தாம் மேல்பவானி பிராஜக்டுக்காக அதிக முயற்சி செய்து சாதித்தவர் என்று எழுதியிருப்பது குடியானவர்களை ஏமாற்றி ஓட்டு வாங்கும் எண்ணத்துடன் எழுதப்பட்டதென்றே சொல்லவேண்டும். ஆனால் மேல்பவானி பிராஜக்டை முதன் முதல் 1924-ஹூ ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் உண்மையுடன் பிரயத்தனம் எடுத்து இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டுவந்திருப்பது நாங்கள் சொல்லாமலே மகாஜனங்கள் அறிவார்கள். தவிர நீர்ப்பாசன சிப் இஞ்சினியர் 1924-ஹூ இவ்விஷயமாய் நமது ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கு எழுதிய கடிதத்தில் மேல்பவானி பிராஜக்ட்டு விஷயத்தில் ஸ்ரீமான் கவுண்டர் பிரமுகராயிருப்பதாகத் தெரிகிறது என்று குறிப்பிட்டிருப்பதாலும் நன்கு விளங்கும். ஆகையால் இச்சமயம் மேற்படி அய்யங்கார் சொல்லுவதை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

இங்ஙனம்,

T. வீரப்ப கவுண்டர், பட்டக்காரர்,
P. முத்துகுமாரசாமி,
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்கள்.

[7-ம் பக்கத் தொடர்ச்சி.]

ள சமூகத்தினரின் வாக்குக்கிடைக்கும்படி முயற்சிகொள்ளுமாறும் வேண்டுகிறேன்.

நம்மவர்களால் ஆக்கப்பட்ட இந்துமத பரிபாலன சட்டத்தை அடித்து, பார்ப்பன அர்ச்சகர்களும், தாசி, வேசிகட்கும் ஆதிக்கம் தேட முயன்ற "அய்யங்கார்" குழாத்தினின்றும் இன்றே! இன்றே!! இன்றே!!! விலகுமாறு தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம். வணக்கம்.

தங்கள் குலமகன்,
அய்யாமுத்து.

டாக்டர் நாயுடுவும் தீண்டாமையும்.

சேலத்தில் திரு. வீரய்யன் எம். எல். சி. அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் நடை பெற்ற தமிழ் நாடு ஆதிதிராவிடர்களின் மகாநாடு கூடுவதற்கு முன், அம்மகாநாட்டின் முக்கியஸ்தர்கள் மகாநாடு கூட்ட இடவசதிகளுக்கும், போஜன வசதிகளுக்கும், அங்கும் இங்குமாக அலைந்தார்கள். ஆரம்பத்தில் இம்மகாநாடு நடைபெறுவதே சந்தேகத்திலிருந்தது. மகாநாடு நடைபெற முக்கியமாக இடவசதியும் பணவசதியும் அவசியம். மகாநாட்டிற்கு பணம் வசூல் செய்ய எவ்வளவோ முயன்றும் 50 ரூபாய்க்குள்ளாகவே வசூலித்ததாகவே தெரிகிறது. உபயோகமற்றதும், ஆனால் தங்களுக்கு கவுரவமென்று நினைக்கிற எலக்ஷன்களில் ஆயிரக்கணக்காக செலவழிக்கும் கனவான்கள் பலர், ஒன்றுமே கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டதை என்னென்று கூறுவோம். இவர்களுடைய தேசாபிமானமும், சகோதர உணர்ச்சியும் என்னே! இதை விட்டு இடவசதிக்காக முதலில் காலேஜ் ஹாஸ்டல் கட்டிடம் வேண்டுமென்று பிரயத்தனம் செய்யப்பட்டது. ஆனால் முனிசிபல் கவுன்சில் சேர்மென் எக்காரணத்தை முன்னிட்டோ, அதற்கு இடம் கொடுக்கவில்லை. பின் நீசாபிகல் சபை கட்டிடத்திற்கு முயற்சிசெய்து அதுவும் கைகூடாமற் போய்விட்டது. இவ்விரு இடங்களும் பொது இடங்களாயிருந்தும் இத்தகைய முக்கியமான காரியத்திற்குப் பயன்படாமற் போய்விட்டது விசனிக்கத்தக்கதே.

பொது ஸ்தாபனங்களும், அதன் நிர்வாகிகளும் ஆதிதிராவிடர்கள் விஷயத்தில் இவ்வளவு அநுகூலமாய் இருந்துவிட்டாலும், உத்தமர், உண்மையான தேசபக்தர் சேலத்தில் ஒருவரேனும் இல்லாமற் போய்விடவில்லை. தொடக்கத்திலேயே இவ்வுத்தமரிடம் வந்திருந்தால் இப்பொது ஸ்தாபனங்களின் உண்மைத் தத்துவம் பலர் அறிந்துகொள்ள முடியாமலே போயிருக்கும். எப்பக்கமும் ஆதரிப்பில்லா இம்மகாநாட்டின் காரியதரிசிகள் "செல்லும் செல்லாததற்கு செட்டியார் இருக்கிறார்" என்று நம் தலைவர் டாக்டர்வரதராஜுலு நாயுடு அவர்களிடம் வந்தார்கள். டாக்டருடைய பெருமையையும், உண்மையான அபிமானத்தையும், அன்பையும், பலர் அறிய இது ஒரு சாதகமாயிருக்கிறது. தம்மை வந்து அணுகிய இவர்களுக்கு தம் இயற்கை குணத்திற்கேற்ப மகாநாட்டிற்கு வரும் ஜனங்கள் எல்லோருக்கும் தம இல்லத்திலேயே உணவும் மற்ற உதவியும் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டார்.

இவ்வுபகாரத்தை சுலபமாய் மறுத்துவிட அச்சமயம் அவருக்கு எத்தனையோ காரணங்கள் இருந்தன. எவ்வளவோ அசௌகரியங்கள் இருந்தன. ஆனால் நொண்டிக்கன்றே சருக்கென்பதெல்லாம் சாக்காயிருக்கும். உண்மையான தியாகிகளுக்கு இவைகள் எல்லாம் தடையாமோ? அசௌகர்யங்களையும் பணச்செலவையும் பொருட்படுத்தாது இத்தொண்டை களிப்புடன் ஏற்றுக்கொண்டார். இவருக்கிணங்க இவருடைய மனைவியாரும் இத்தகைய தொண்டில் சந்தோஷமாகவும் மனதாரவும் ஈடுபடுவதே டாக்டர் அவர்களுக்கு மென்மேலும் உற்சாகத்தைக்கொடுக்கின்றன. டாக்டர் அவர்கள் பெற்றிருக்கும் பாக்கியங்களுள் சிறந்த பாக்கியம், நற்குணமும், தியாகமும், தைரியமும், ஒருங்கே பெற்ற தம் மனைவியாரேயாகும்.

மகாநாடன்று, டாக்டர் அவர்களுடைய வீட்டில் நடந்த பஞ்சமர்களுடைய விருந்தை நேரில் கண்டவர்களுக்கே, டாக்டருடைய உண்மையான பெருமை விளங்கும். அவருடைய பங்களா பூரா வும் பஞ்சமர்கள் நிறைந்திருந்தார்கள். டாக்டரும் அவருடைய மனைவியாரும், தங்கள் குழந்தைகளுக்கு விவாக காலத்தில் நடைபெறும் விருந்தென்றே நடந்துகொண்டது, அவர்களுடைய பரிசுத்த தன்மையை காட்டுகிறது. டாக்டர் அவர்களே சேலத்தில் இல்லாதிருந்தால் பஞ்சமர்களுடைய மகாநாட்டிற்கு ரொம்பவும் இடையூறுகள் ஏற்பட்டிருக்கும்.

நேரில் கண்டதும், உண்மையானதுமான இவ்விஷயத்தை காணும்போது, புகழ்ச்சியென டாக்டர் வெறுப்பார் என்றும் அச்சம் எனக்குண்டு. ஆனால் இதை வெளியிட்டதற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. அவருடைய அரும்பெரும் குணங்களை நான் பாராட்டாமலிருக்க முடியவில்லை. மற்றும் பலர், அவர்களைப் பின்பற்றி இத்தகைய காரியங்களில் தம் கடனுற்ற முன்வருவார்கள் என்ற எண்ணத்துடனே இதை எழுதலானேன்.

வை நடேசன்.

கலியாண சந்தடியில் தாலி கட்டுவதை மறந்துவிடாதீர்கள்.

சட்ட சபைத் தேர்தல்களில் மக்கள் அபரிமிதமான ஊக்கத்தில் இருப்பதால், தீபாவளிக்குக் கதரை மறந்துவிடுவார்களோ எனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்களைப் பொறுத்தவரை, பார்ப்பனரல்லாதார் கட்சியினால் ஏற்படும் நன்மைகளைவிட, பதின்மடங்கு நிரந்தரமான நன்மைகள், கதரினால், பெரும் பான்மையான பார்ப்பனரல்லாத சமூகமாகிய ஏழை சகோதரி சகோதரர்களுக்கு ஏற்படும் என்பதை மறவாதீர்கள். ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்காமல் என்ன சுதந்தரமோ சுயராஜ்யமோ? பெற்றாலும் அது உண்மையான சுயராஜ்யமாகாது. பார்ப்பனரல்லாதார் சகோதரர்கள் ஒவ்வொருவரும், சுயநலத்தை உத்தேசித்து அல்லாமல் உண்மையாய்ப் பார்ப்பனரல்தாருக்கு உழைப்பவர்களாயிருந்தால், கதரின் மூலமாகத்தான் வெளியாகும். கதரை மதிக்காத பார்ப்பனரல்லாதார் கட்சி ஜெயிப்பதும் பார்ப்பனரல்லாதாரை அழுத்தப் புறப்பட்ட காங்கிரஸ சுயராஜ்யக் கட்சி ஜெயிப்பதும் ஒன்றுதான். ஆதலால் கலியாண சந்தடியில் தாலி கட்டுவதை மறந்ததுபோல் தேர்தல் தடபுடலில் கதரை மறந்துவிடாதீர்கள்.

5000 புத்தகம் இனும்

"செல்வக்களஞ்சியம்."

இது ஒரு உயர்தரமான மாதப்பத்திரிகை. இதில் தேகசுகம்; நீண்ட ஆயுள் பெறும்வழி, குடும்பவைத்தியம், அருமையான மருந்து முறைகள், புதியபார்ங்கள், பணந்தேடும் வழிகள், டதுக்கைத் தொழில்கள், சோப்புசெய்யும் முறை, சர்ப்பத்துகள், வாசனை முதலிய புதிய தொழில் முறைகள், தெய்வவழிபாடு, பல்வகை இன்ப நிலைகள் பற்றியன வெளிவரும்.

ஆண்டு கையொப்பத்தொகை ரூபாய் 1.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0
எமதுவிலாசம்:— நூற்பதிப்புத்தலைவர்,
"செல்வக்களஞ்சிய" நிலயம்,
மேலைக்கோபுர உட்புறம், மதுரை.
தனிச்சுவடி விலை அணா 2.

6ம் பக்கத் தொடர்ச்சி.

வரை அதனால் ஏற்பட்டிருக்கும் நன்மைகள் இவைகளானால், இக்கொடுமைகளும் சூழ்ச்சிகளும் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்மைகள் உண்டாகி இருக்கும்?

எல்லாவற்றிற்கும் மேற்பட்ட நன்மை.

நன்மையோ தீமையோ எது எப்படி இருந்தாலும் இந்துமத பரிபாலன மசோதா என்னும் தேவஸ்தான உரிமை மசோதாவும், மலையாளக் குடிவார மசோதா என்னும் மலையாளப் பெண்கள் கற்பைக் காக்கும் மசோதாவும் நிறைவேற்றப்பட்டதானது தமிழ் மக்கள் லக்ஷக்கணக்கான பேர் பிராணனைக் கொடுத்தாலும் கோடிக் கணக்கான பொன் திரவியத்தைக் கொடுத்தாலும் சாதிக்க முடியுமா? இதன் அருமை இவ்விரண்டு தத்துவங்களிலும் பார்ப்பனர்கள் இதுவரை செய்துவந்த அக்கிரமங்களை அறியத் தகுந்த கவனிப்பாளர்களுக்குத் தான் தெரியுமே அல்லாமல் மற்றவர்களுக்கு விளங்காது. ஆதலால், ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி நமது பார்ப்பனர்கள் தூற்றுவதும் ஆட்களைவிட்டுத் திட்டச் செய்வதும் அக்கக்ஷியின் உழைப்பினால் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏற்படும் நன்மைகளை ஒழிப்பதற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு பங்கமில்லாமல் பார்த்துக் கொள்வதற்காகவே இவ்வளவு பிரயத்தனங்களும் சூழ்ச்சிகளும் செய்கிறார்களே யொழிய வேறில்லை. இவற்றை நமது மக்கள் அறியாமலும், அறிந்தும் பலர் லட்சியமில்லாமலும், லட்சியமிருந்தாலும் தங்கள் சுயநலத்தைக் கருதியும் பார்ப்பனர்களுக்கு ஆளாயிருந்து இவ்வளவு முக்கியமானதும் அவசியமானதுமான இயக்கத்திற்கு விரோதமாய்ப்பார்ப்பனர் செய்யும்சூழ்ச்சிகளுக்கு துணை நிற்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கக்ஷி அரசியல் உரிமைக்கு விரோதமா?

பலர் இக்கட்சியை வெகு சுலபமாக அரசியல் உரிமைக்கு விரோதமான கட்சி என்று சொல்லிப் பாமர மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். அரசியல் உரிமைக்கு எக்கட்சியாவது அநுகூலமாய் உழைக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? அரசியல் உரிமை என்றால் என்ன என்றுவது யாராவது இதுவரை பாமர மக்களுக்கு தெரிவித்திருக்கிறார்களா? முதலாவது சுயராஜ்யம் என்றாலாவது என்ன என்று எந்த, தலைவர்களாவது தேசியப் பத்திரிகைகளாவது விளக்கியிருக்கின்றனவா? படித்தவர்கள் உத்தியோகமும் பதவியும் பணமும் சம்பாதிப்பதுதானே சுயராஜ்ஜியமாகவோ அரசியல்சுதந்திரமாகவோவிளங்கிவருகிறது.

காங்கிரஸ்.

காங்கிரஸ் ஏற்பட்ட காலம் முதல் கொண்டு நாளதுவரை (மகாத்மா காங்கிரசாகிய 2, 3 வருஷம் காங்கிரஸ் போக) காங்கிரசின் மூலம் மக்கள் அடைந்த நன்மை என்ன? காங்கிரசு ஏற்படுவதற்கு முன்னால் இந்திய மக்கள் அரசாங்கத்தாருக்குச் செலுத்திவந்த வரியைவிட இப்போது மூன்று பங்கு வரிகள் அதிகமாய்ச் செலுத்துகிறார்கள். அதாவது காங்கிரசுக்கு முன் அரசாங்கத்திற்கு மக்கள் செலுத்தியவரி 50 கோடி ரூபாயைவிட்டுகுறைந்தது. இப்போது காங்கிரசின் பலனாகவும் சீர்திருத்தங்களின் பலனாகவும் அரசாங்கத்திற்கு மக்கள் செலுத்தவேண்டி ஏற்பட்ட வரி 150 கோடி ரூபாயைவிட அதிகமானது. காங்கிரசுக்கு முன்னால் நமது மக்கள் குடித்துக்கொண்டு இருந்த கள்ளு சாராயத்தைவிட காங்கிரசும் அதன் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தத்திற்கு பின்னால் ஒன்றுக்கு 10 பங்கு குடி அதிகமாகி விட்டது. அதாவது காங்கிரசுக்கு முன்னால் சர்க்காருக்கு கள் சாராயம் முதலிய விற்பனையில் கிடைத்த ரூபாய் 2 கோடி. காங்கிரசுக்கும் அதன்பலனாய் ஏற்பட்ட சீர் திருத்தங்களுக்கும் பின்னால் சர்க்காருக்கு கள் சாராயம் முதலிய விற்பனையில் கிடைக்கும் ரூபாய் 20 கோடி. காங்கிரசுக்கு முன்னால் நமது நாட்டில் ஏற்பட்டிருந்த கோர்ட்டுகளுக்கும் உத்தியோகங்களுக்கும், காங்கிரசுக்குப் பின்னால் ஏற்பட்ட உத்தியோகங்களுக்கும் கணக்குப் பார்த்தால் ஒன்றுக்கு நான்கு ஐந்து ஆகிவிட்டது. அதாவது, காங்கிரசுக்கு முன் ஒரு ஜில்லாவிற்கு 2 முனிசீப்புகோர்ட்டுகள் இருந்திருந்தால் காங்கிரசுக்கும் சீர் திருத்தத்திற்கும் பின்பு 8, 10 முனிசீப்புகோர்ட்டுகளாகிவிட்டன. ஒரு ஜில்லாவுக்கு 2 உதவி கலெக்டர்கள் இருந்தால் இப்போது 5, 6 உதவி கலெக்டர்களாக உயர்வு ஆகிவிட்டது. காங்கிரசுக்கு முன்பு இருந்த சம்பளத்தைவிட ஒன்றுக்கு இரண்டு மூன்று பங்கு வீதம் உயர்ந்து விட்டது. காங்கிரசுக்கு முன்னால்நமதுநாட்டுத் தொழிலாளிகளுக்கு இருந்த தொழில்களில் 8-ல் ஒரு பங்கு கூட காங்கிரசுக்குப் பின்னால் கிடையாது, காங்கிரசுக்கு முன்னால் இருந்த செல்வமும். செழிப்பும், இப்போது மறைந்து போய் காங்கிரசும் சீர் திருத்தமும் ஏற்பட்டபிறகு தரித்திரமும் பட்டினியும் அதிகமாகிவிட்டது. ஆனால், காங்கிரசுக்கு முன் விளைந்த விளைபொருள்களைவிடவும் அதன் விலைகளை விடவும் ஒன்றுக்கு மூன்றாய் விளைபொருள்கள் விளைந்தும் தரித்திரமாகிவிட்டது. காங்கிரசுக்கு முன்னால் நமது பணம் எவ்வளவு வெளிநாட்டுக்கு போய்க்கொண்டிருந்ததோ அதைவிட பதின்மடங்கு காங்கிரசுக்குப் பின்னால் துணிக்கும் மற்ற சாமான்களுக்குமாக வெளிநாட்டுக்குப் போகிறது. தேசத்தில் காங்கிரசுக்கு முன் இருந்த ஒற்றுமை அடியோடு கலைந்துபோய் இந்து மகமதிய கிருஸ்தவ மத விரோதங்களும் இந்துக்களுக்குள் பிராமணர்-பிராமணரல்லாதார் விரோதங்களும், பிராமணர்களுக்குள் ஐயங்கார் ஸ்மார்த்தர் மாத்துவர் என்கிற விரோதமும் அய்யங்காரில் வடகலை தென்கலை விரோதங்களும் இதுபோலவே பார்ப்பனரல்லாதாருக்குள் ஆந்திர தேசத்தான் தமிழ் நாட்டான் கேரளத்தான் என்கிற பாகுபாடும், தமிழ் நாட்டாருக்குள் பிராமணரல்லாதாரிலேயே திராவிடர்-ஆதித்திராவிடர் என்கிற வித்தியாசமும் இன்னமும் எத்தனையோ பாகுபாடும் அபிப்பிராய பேதமும் வளர்ந்துவிட்டன. காங்கிரசுக்குமுன் தாய் பிள்ளைகள் பந்துக்கள் போல பழகிவந்த ஒரு கிராமத்தார் காங்கிரசும் அதன் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் மூலம் உண்டான தேர்தல் (எலக்ஷன)களால் கிராமகளுக்குள் கட்சியும், அண்ணன்தம்பிகளுக்குள் விரோதமும் குடும்பங்களில் கலகமும் உண்டாயிருக்கின்றன. காங்கிரசுக்குமுன்னால் அதிகாரிகளிடத்திலும் மக்களிடத்திலும் இருந்தநாணயமும் கண்ணியமும்காங்கிரசுக்குப்பின்னால்அடியோடு மாறி ஹைகோர்ட்டு முதல் கிராமாதிகாரி கோர்ட்டுவரை லஞ்சம் வாங்குவதைப்பற்றி அதிகாரிகள் அருவருக்காமலும் மக்கள் கொடுப்பதற்கு பின் வாங்காமலும் ஏற்பட்டுப்போய்விட்டது. காங்கிரசுக்குமுன் இருந்த நீதிக்கும் நிருவாகத்திற்கும் காங்கிரசுக்குப் பின்னால் ஏற்பட்ட நீதிக்கும் நிருவாகத்திற்கும் மலையும் சமுத்திரமும் போன்றவித்தியாசமேற்பட்டுவிட்டது. பணக்காரனுக்கு அவ்வித தீர்ப்பு வேண்டுமானாலும் கிடைக்கத்தக்கதாகவும் ஏழைகளுக்கு நீதி என்பதே குதிரைக்கொம்பாகவும்போய்விட்டது.

எந்த விதத்தில்?

எந்த விதத்தில் காங்கிரசினாலும் அது பெற்றெடுத்த சீர்திருத்தங்களினாலும் மக்கள் அநுகூலமடைந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்லமுடியுமா? அறியாமையின் பலனாகவும், மாயையின் பலனாகவும் நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லும் காரியங்கள் எல்லாம் தேசத்தின் கெடுதிக்கும் மக்களின் தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கிறதே அல்லாமல் ஊன்றிப்பார்த்தால் கடுகளவு நன்மையும் ஏற்பட்டதில்லை.

உண்மையாய் காங்கிரசினால் ஏற்பட்ட லாபம் என்னவென்றால்

காங்கிரசினால் ஏற்பட்ட உண்மையான லாபம் என்னவென்றால் காங்கிரசுக்கு முன்பு பிச்சை எடுத்த பார்ப்பனனும் தூதுசென்ற பார்ப்பனனும் பஞ்சாங்கம் சொல்லி வயிறு வளர்த்த பார்ப்பனனும் காங்கிரசின் பலனாய் வைசிராய் நிருவாகசபை மெம்பர், கவர்னர் நிருவாக சபை மெம்பர், கலெக்டர், மாதம் 10,000, 20,000 சம்பாதிக்கத்தக்க வக்கீல்கள், ஜமீன்தாரர்கள், திவான்பகதூர், சர், மகா மகா கனம் முதலிய பட்டங்கள், பெரிய பெரிய பங்களாக்கள், மோட்டார் வண்டிகள், செலூன் முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு பிரயாணம், அவரவர்கள் பெண்டு பிள்ளைகள் 1,000, 10,000 பெறத்தக்க வயிர ஓலை, அட்டிகை, காப்பு, வளையல்கள். 100, 200 பெறும்படியான, சேலைகள் 30, 40, பெறும்படியான ரவிக்கைகள் அணிவது முதலியதுகளோடு, திருடினாலும் குடித்தாலும் சூதாடினாலும் விபசாரத்திற்கு தாகு வாங்கினாலும் விபசாரத்தால் கால் கை அழுகினாலும் தங்களை பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதை பலப்படுத்திக் கொள்ளவுமான காரியங்களுக்கு உபயோகப்பட்டதல்லாமல்,

மற்றும்.

காங்கிரசுக்கு முன்னாலும் ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வருவதற்கு முன்னாலும் அரசர்களாகவும், ஜமீன்தாரர்களாகவும், பாளையக்காரர்களாகவும் பாரம்பரியமாய் பெருங்குடி மக்களாகவும் வாழ்ந்து வந்தவர்கள். காங்கிரசின் பலனாய் பிற்பட்ட வகுப்பார்களாகவும், பங்கா இழுப்பவர்களாகவும், கூலிகளாகவும், கூலிகூட கிடைக்காமல் வெளிநாடுகளுக்கு வயிறு பிழைக்க பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு குடி போகவுமான நிலைமைக்குவந்திருக்கிறார்கள்.

ஆதலால்.

ஆதலால் பார்ப்பனரல்லாத மக்களே காங்கிரஸ் என்னும் மாய வலையில் சிக்கி பார்ப்பனர்

கரு. பெரி. பெரியையாவின் கடிதம்.

மைடான் டில்லி,
13—10—26.

வந்தேமாதரம்.

"குடி அரசு" ஆசிரியரவர்கட்கு.

அன்புமிக்க ஐயா,

வஞ்சகமும் சூதும் குடிகொண்ட ஓர் வகுப்பினர் நம்மை எழ்மைப்படுத்தியும், தாழ்வினால் பார்ப்பனரல்லாதார் சமூகம் இதுவரை அழிந்ததும் அழுத்தப்பட்டதும் போதாமல் இனியும் தாழ்ந்து பார்ப்பனர்களால் மிதிபட்டு அழிந்து போகாமல் தற்காத்துக் கொள்ள வேண்டியது உங்கள் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். இதுவரை ஏமாந்து வந்திருப்பதைக் கொஞ்சமாவது கவனித்து பார்ப்பனரல்லாதார் நிலைமை காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது காங்கிரசுக்குப் பின் எப்படி இருக்கிறது நம் நாட்டுப் பார்ப்பனரின் நிலைமை காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது. காங்கிரசுக்குப் பின் எப்படி இருக்கிறது என்று பழம்பெரும் அநுபவசாலிகளைக் கேளுங்கள். நானும் தேசபக்தன் என்றுசொல்லும் வயிற்றுபிழைப்புக்காரக் கூட்டிகளை நம்பி மோசம் போகாதீர்கள்.

டாக்டர் நாயர் பெருமான் மகாத்மாகாந்தி.

டாக்டர் நாயர் பெருமானைவிட நீங்கள் பெரிய தேசபக்தர்கள் என்றாவது அநுபவசாலிகள் என்றாவது மகாத்மா காந்தியைவிட பெரிய தியாகிகள் என்றாவது காங்கிரஸ் பக்தர்கள் என்றாவது நினைத்துக் கொள்ளாதீர்கள். டாக்டர் நாயர் ஏன் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்படுத்தினர் என்பதை நன்றாக யோசித்துப் பாருங்கள். பணத்திற்கா உத்தியோகத்திற்கா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காக்கவா என்பதை யோசியுங்கள். மகாத்மா காந்தி ஏன் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகி ராட்டினம் சுற்றுகிறார். அவரைவிட நீங்களும் இந்தப் பார்ப்பனர்களும் அதிக ராஜீய ஞானமுடையவர்களா? சட்ட சபை மூலம் அரசியல் நன்மை ஏற்படுமானால் மகாத்மா சும்மா இருப்பாரா என்பதை யோசியுங்கள். கண்டிப்பாய் பார்ப்பனர் சட்ட சபைக்குப் போவது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கே அல்லாமல் வேறல்ல! வேறல்ல!! வேறல்லவேயல்ல!!!

பார்ப்பனரல்லாதார் (ஜஸ்டிஸ் கட்சியார்) சட்டசபைக்குப் போவது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்களது சுயமரியாதையைக் காக்கவுமே அல்லாமல் சர்க்காருக்கு அநுகூலத்திற்காக அல்லவே அல்ல! அல்லவே அல்ல!! அல்லவே அல்ல!!! இது சத்தியம். சர்க்காருக்கு உதவியாகவும் ஒத்துழைப்பாளராகவும் ஒற்றர்களாகவும் இருப்பது பார்ப்பனர்களே தான்! பார்ப்பனர்களேதான்!! சத்தியமாய் பார்ப்பனர்களேதான் !!!

முடிவுரை.

நாளது நவம்பர் மீ 8-உ வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் ஓட்டுப்போட இஷ்டமிருந்தால் உங்கள் மனதை உறுதிப்படுத்திக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கே ஓட்டுப்போடுவதென்று முடிவு செய்து கண்டிப்பாய் பார்ப்பனருக்கோ அவரால் நிறுத்தப்பட்டிருக்கும் காங்கிரசு சுயராஜ்யக் கட்சி என்று சொல்லும் ஆட்களுக்கோ ஓட்டுப் போடுவதில்லை என்று சத்தியம் செய்துகொண்டு உங்கள் இனத்தார்களையும் நண்பர்களையும் இம்மாதிரி செய்யும்படி தூண்டி பார்ப்பனரல்லாத கட்சியாகிய சுயமரியாதைக் கட்சிக்கு வெற்றி கொடுத்துப் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காக்கப் பிரார்த்திக்கிறேன்.

மையாகவும் மதித்துச் செய்துவந்த அக்கிரமங்களை நினைத்தால் என்போன்றோரிருதயம் துடிக்கிறதெனில் தங்களைப்போன்ற உத்தமர்களுடைய மனம் எவ்வாறு சகிக்கும்.

அவ்வகுப்பினரின் துவேஷத்தைச் சிறிதும் பொருட்படுத்தாதுபெரிய சூழ்ச்சிக்கும் தந்திரத்திற்கு மிடையில் கொஞ்சமும் அஞ்சாது நமது "குடி அரசு" மூலம் தாங்கள் செய்து வந்த தொண்டுக்கு பார்ப்பனரல்லாதாராகிய நாங்கள் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

சிற்க எமாற்றி வயிறு வளர்க்கும் அன்னக்காவடிகள் நம்மை வலுவில் அழைத்திருக்கும் போரில் தாங்களும், எங்கள் வரதராஜுலு நாயுடுகாரவர்களும் தலைமை வகித்துப் போர் தொடங்குவதானால் ஆயிரக்கணக்கான வீர சிங்கங்கள் முன்வருவார்கள். பார்ப்பனீயம் என்ற மாயப் பேயும் தானே ஒடுங்கி அழிந்துபோகும். நமதுபோருக்கு முக்கிய கருவி கிராமப்பிரசாரமே. ஆதலால் "குடி அரசி"லும், "தமிழ்நாடு"விலும், கிராமப்பிரசாரத்தின் அவசியத்தையும், பணத்தேவையையும் வெளியிட்டால் ஒவ்வொரு உத்தமப் பார்ப்பனரல்லாதாரும் உதவி செய்ய முன்வருவார்கள்.

இந்கள்ள சநோதரர்களிடம் வசூலித்த தொகையும் ஜாப்தாவும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

இப்படிக்கு:
தங்கள் உண்மையுள்ள.
கரு. பெரி. பெரியையா.

பார்ப்பனரல்லாதார் நிதி.

மைடான் டில்லியில் வசூலான விபரம்.

	ரூ.
மைடான் டெல்லி கரு பெரி. பெரியையா வரவு	25
ஷை யூர் ஸ்ரீமான் அள. கரு. சோமசுந்தரம் செட்டியார் வரவு	10
ஷை யூர் ஸ்ரீமான் கரு. சு. ம. சோமசுந்தரம் செட்டியார் வரவு	5
ஷை யூர் ஸ்ரீமான் ராம. அ. சு. ப. லட்சுமணஞ் செட்டியார் வரவு	5
ஷை யூர் ஸ்ரீமான் ஆ. த. ராம. மு. செங்கமலம் பிள்ளை வரவு	5
ஷை யூர் ஸ்ரீமான் க. பா. க. கந்தசாமி பிள்ளை வரவு	3
பிஞ்வசை ஸ்ரீமான் முரு. அ. அருணாசலம் பிள்ளை வரவு	5
ஷை யூர் ஸ்ரீமான் ராம. பெருமாள் பிள்ளை வரவு	5
லங்கார் ஸ்ரீமான் க. ஆரு. ராம. ஆறுமுகம் பிள்ளை வரவு	2
ஆகக்கூடியது ஜாவா ரூ	65
மதராஸ் 38-140 நம்பர் ட்ரூப் 1க்கு இந்திய ரூ.	72

எழுபத்திரண்டும் மாற்றியவுடன் பதில் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
கரு. பெரி. பெரியையா.

குறிப்பு;— "குடி அரசி"ன் ஊழியத்தைப் பாராட்டி ஸ்ரீமான் கரு. பெரி. பெரியையா அவர்கள் அனுப்பிய இந்திய நாணயம் ரூ. 72-ம் அங்கீகரிப்பதுடன் நம்மனோர் முன்னேற்றத்தில் ஊக்கங்காட்டி பணந் தந்துதவிய அன்பர்கட்கும், ஸ்ரீமான் பெரியையா அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ப—ர்.

ஒரு மறுப்பு.

பல்லடம் தாலுகா மந்திரிபாளையம் போர்டு பாடசாலை பார்ப்பன உபாத்தியாயர் விஷயம்.

சென்றவாரம் "குடி அரசு" இதழில் திருப்பூர் ஸ்ரீமான் மா. வே. கருப்பண்ண செட்டியார், மந்திரிபாளையம் போர்டு பாடசாலையைப்பற்றியும் பார்ப்பன உபாத்தியாயரைப் பற்றியும் வெளியிட்டுள்ள விஷயங்கள் நேரில் பாராமல் கூறிய கூற்றாகும். 5 அங்கண வீடு, அங்கு உபாத்தியாயர் குடியிருந்துகொண்டு பலகாரக்கடை வைத்திருத்தல், 5, 6 பிள்ளைகள் மாத்திரம் படித்தல் ஆகிய விஷயங்களை ஸ்ரீமான் கருப்பண்ண செட்டியார் எந்த தேதியில் வந்து பார்வையிட்டாரென அறிய விரும்புகிறேன். என மந்திரிபாளையம் ஸ்ரீமான் அ. முத்துசாமி செட்டியாரும், ஷை போர்டு பாட்சாலை உபாத்தியாயர் போஸ்டாபீஸ் வேலை அரை மணி நேரம் பார்ப்பதினால் பள்ளிக்கூட வேலை கெடவில்லை. 3, 4 வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட, கல்வி அபிவிருத்தியாகியிருக்கிற விஷயம் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும் ஊர் பொது ஜனங்களுக்கும் நன்றாகத் தெரியும். உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் குடியிருக்கவில்லை. பக்கத்தில் வேறொரு இடத்தில் வசித்து வருகிறார். இது ஊரார் அறிவர். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் சொல்லுவனவற்றை நிரூபணம் செய்ய வேண்டுமென விரும்புகிறேன். என மந்திரிபாளையம் ஸ்ரீமான் ஆர். எம். ராமலிங்கம் செட்டியாரவர்களும் அறிவித்திருக்கிறார்கள்.

குறிப்பு:—உள்ளூர் வாசிகளாலேயே மறுக்கப்படும்இவ்விஷயத்திற்கு திருப்பூர் ஸ்ரீமான் மா வே. கருப்பண்ண செட்டியார் சமாதானம் கூறுவாரென நம்புகிறோம். ப-ர்.

கோயமுத்தூர் ஜில்லா ஒடுக்கப்பட்ட தேவேந்திர வேளாள மஹாநாடு

நிகழும் 1926௵ நவம்பர்மீ 6,7௳ சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோயமுத்தூர் டவுன் ஹாலில், கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டும், முனிசிபல் சேர்மனுமாகிய ராவ்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கோயமுத்தூர் ஜில்லா ஒடுக்கப்பட்ட தேவேந்திர வேளாள மஹாநாடு நடைபெறும். அவ்வமயம் ஸ்ரீமான்கள் ஜி. ஸ்ரீநிவாசம் பிள்ளை, டி. எஸ் பாலசுந்திரம் பிள்ளை (காரியதரிசி) சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, பி. எம். ஆர். மாணிக்க சுந்தரம் செட்டியார், எஸ. மூர்த்தி ஆகிய கனவான்கள் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிச்சொற்பொழிவுநிகழ்த்துவார்களென ஆமபூர் ஸ்ரீமான் எ. ஜி. ஸ்ரீநிவாசம்பிள்ளை (காரியதரிசி) அறிவிக்கிறார்.

4-ம் பக்கத்தொடர்ச்சி.

விளங்குபவர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.எ.எம்.எல். அவர்களாவர். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் ஆரியப் புரோகிதனை மாத்திரம் ஒழித்துவிட்டால் போதாது. ஆரிய மந்திரங்களையும் நீக்கிவிட வேண்டும் என்று வேலை செய்து வருகிறார்.

ஸ்ரீமான்பிள்ளையவர்கள் தொடங்கியவேலை சென்ற வெள்ளிக்கிழமை யன்று (27-8-26) திருவள்ளுவ நாயனார் எழுந்தருளியிருக்கும் திருமயிலையில் ஆரம்பிக்கப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறள்கழகத்தின் செயலாளர் திரு. எ நடேச நாட்டார் அவர்களுக்குத் திருமணம் அன்று நடை பெற்றபோது ஆரியப் புரோகிதனும் வடமொழி மந்திரங்களும் இடம்பெறவில்லை. தமிழராகிய ஒரு ஓதுவர் மூர்த்திகளைக்கொண்டு தமிழில் மந்திரங்களைச் சொல்வித்து திருமணம் நடைபெற்றது. எரியோம்பல் முதலிய எல்லாச் சடங்குகளும் நவக்கிரக வணக்கம் முதலிய எல்லாத் தோத்திரங்களும் தமிழ் மொழியிலேயே முறைப்படி நடைபெற்றன. அது காலை அங்குக் குழுமியிருந்த எல்லோருடைய உள்ளத்திலும் உண்டான ஆனந்தத்திற்கும் உணர்ச்சிக்கும் எல்லையில்லை. அன்று சுயமரியாதையும் தமிழின் மேன்மையும் தாண்டவமாடின. அங்கு சொல்லப்பட்ட தமிழ் மந்திரங்கள், எல்லாம் வல்ல கடவுளுக்கு மாத்திரமல்ல அங்கு வீற்றிருந்த ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய யாவருக்கும் நன்றாகவும் தெளிவாகவும் பொருள் விளங்கின. திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, சுரேந்திரநாத் ஆரியா, டாக்டர் நடேச முதலியார் சக்கரைச் செட்டியார், ஒ. தணிகாசலஞ் செட்டியார் முதலிய பெரியோர்களும் வந்திருந்து அஷ்டி தமிழ் மணத்தைக் கண்டு களித்துப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அக்கலியாணத்தில் வந்திருந்த எல்லோரும் இனிமேல் தங்கள் வீடுகளில் நடக்கும் கலியாணங்களிலும் தமிழ் மந்திரங்களையே சொல்லச் செய்வதாக உறுதி செய்துகொண்டார்கள். சுய மரியாதையையும் சுயராஜ்யத்தையும் தமிழின் மேன்மையையும் விரும்பும் ஒவ்வொருவரும் இத்தமிழ்த் திருமணத்தை நாடெங்கும் பரவச் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக இனி மணம் செய்துகொள்ளப் போகும் ஒவ்வொரு ஆண் மகனும் பெண் மகளும் தமிழ் குருக்களைக்கொண்டு தமிழ் மந்திரங்களைச் சொல்வித்துத் திருமணச் சடங்கை முடித்துக்கொள்வதில் அதிக ஊக்கத்துடன் உறுதிகொள்ள வேண்டும். திருமணங்களில் மாத்திரமல்ல ஏனைய சடங்குகளிலும் தமிழ் மந்திரங்களே சொல்லப்பட வேண்டும்

இத்தமிழ் மந்திரங்களை விரைவில் அச்சியற்றப் போகிறபடியால் ஒவ்வொருவரும் அதனை நன்கு வாசித்து உணரலாம். சமஸ்கிருத மந்திரங்களிலுள்ள உண்மைகள் தான் இத்தமிழ் மந்திரங்களிலும் அமைந்திருக்கின்றன. பொருள் விளங்காத மந்திரங்களைவிட பொருள் விளங்கும் மந்திரங்கள் மிக மேன்மையானதன்றோ? பஞ்சாட்சர முதலிய மந்திரங்களைப் பொருள் விளங்காமல் சொல்வதைப் பார்க்கிலும் பொருளறிந்து சொல்வதனால் விரைவில் பலன் கிடைக்கும் என்பது சாஸ்திர உண்மை. ஆகவே பொருள் விளங்காத சமஸ்கிருத மந்திரங்களைச் செய்வதைவிட பொருள் விளங்கும் தமிழ் மந்திரங்களைச் சொல்லி விரைவாகவும் நிச்சயமாகவும் நாம் கருதிய பலனையடைவது மேலானதல்லவா? இதில் எல்லாத் தமிழர்களும் கட்சிபேதம் மதபேதம் இன்றி ஒத்துழைப் பார்பார்களென்பதில் ஐயமில்லை. கலியாணம் சிரார்த்தம் முதலிய காலங்களில் நம்மவர் பணத்தை வருவாயாகக்கொண்டு பிழைத்துவரும் பார்ப்பனப் புரோகிதர்கள் பல சூழ்ச்சிகளும் தந்திரங்களும் செய்வார்கள். அதற்கு நாம் இடந்தரலாகாது என்றுமுதல் நாம் பார்ப்பன புரோகிதனையும் வடமொழி மந்திரங்களையும் ஒதுக்கி விடுகிறோமோ அன்று தான் நமக்குச் சுயமரியாதை கிடைக்கும். இச்சுயமரியாதைதான் நமக்குப் பெருமைதரும் சுயமரியாதைதான் அடிமைத் தனத்தை நீக்கிச் சுதந்தரத்தை யளிக்கும். சுயமரியாதைதான் சுயராஜ்யம். ஏனென்றால், சுயமரியாதைக்கும் சுயராஜ்யத்திற்கும் பிரிக்க முடியாத சம்பந்தம் உண்டு. ஆகவே. நமது சுயமரியாதையைக் காத்துக்கொள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். கேவலம் தருப்பைப் புல்லை ஆயுதமாக உடைய ஒரு பார்ப்பனப் புரோகிதனுக்கு அடிமைப்பட்டிருப்பதை நீக்கிக்கொள்ள முன்வாராதவனை மனிதரென்று சொல்வதெங்ஙனம்? ஆரியப் புரோகிதனும் சமஸ்கிருத மந்திரங்களும் ஒழிந்து தமிழ் குருக்களும் தமிழ் மந்திரங்களும் என்றைக்கு இடம் பெறுகிறார்களோ அன்றுதான் ஒரு நல்ல நாளாகும். அதுதான் சுயராஜ்ய நாளாகும்.

இதனை, வயது சென்ற பழைய மனிதர்களும் ஆராய்ச்சியுடன் கூடிய கல்வியில்லாதவர்களும் மூட நம்பிக்கை யுள்ளவர்களும் விரும்பமாட்டார்கள். ஆனால் அறிவாளிகளாகவுள்ள பெரியோர்கள். இதனை ஒப்புக்கொள்வார்கள். இளைஞர்களாக உள்ள ஆண்மக்களும் பெண்மக்களும் அந்தந்தக் குடும்பத்தில் தலைவர்களாக வரும் போது இச் சீர்திருத்தங்களை அவசியம் செய்ய வேண்டும். அன்றியும், இதுகாலை வேண்டப்படுவது பொது மக்களுடைய மனதில் பதியும்படி இச் சீர்திருத்தத்தைப் பிரசாரம் செய்வதாகும் என்று சினி. வேங்கடசாமி எழுதுகிறார். (திராவிடன்)

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசித்திருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0

1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.

[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன் ஆபீஸ்.

சௌகார் பேட் போஸ்ட், ஜி. டி- மதராஸ்.

காலித்தனத்தைஅடக்க
சர்க்கார் உத்திரவு.

சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியார்கள் தேர்தல் பிரசாரத்திற்கென்று ஏற்பாடு செய்யும் கூட்டங்களிலெல்லாம மயிலைப் பார்ப்பனர்கள் கூலி கொடுத்து காலிகளை விட்டு குழப்பமும் கலகமும் செய்து வந்ததையும் போலிசார்கள் இதைப்பற்றி சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் கவலை ஈனமாயிருந்ததையும் அறிந்த ஜஸ்டிஸ்கட்சி பிரமுகர்கள் கவர்னர் பிரபுவைக் கண்டு இக்காலித்தனத்தை"நீங்கள் அடக்க வழி செய்கிறீர்களா அல்லது நாங்களே அடக்க ஏற்பாடு செய்வதா" என்று இறுதிப் பிரேரபணை செய்தார்கள். அதற்கு கவர்னர் பிரபுதானே தக்கது செய்வதாய் ஒப்புக்கொண்டு தேர்தல் கூட்டங்களைப் பற்றிய அரசாங்க உத்திரவு என்பதாக ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார். அவ்வுத்திரவின் சாரமாவது:—காலிகள் கூட்டத்தில்வந்து கூட்டத்தை கலைப்பார்களென்று யாருக்காவது தோன்றி; அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டால் அவர்களுக்காக அக்கூட்டத்தை ஒழுங்காய் நடத்திக் கொடுக்கவேண்டிய ஏற்பாடு அதிகாரிகள் செய்ய; வேண்டியது என்றும், கூட்டத்தின் அமைதிக்கு கெடுதி இல்லாமல் யாராவது கேள்வி கேட்டால் அனுமதிக்க வேண்டுமென்றும் பிறப்பித்திருக்கிறார்கள். இவ்வுத்திரவினால் இவ்வுத்திரவிற்கு முன்னாலேயே கலகம் செய்து கூட்டத்தைக் கலைக்க கொடுத்த கூலிகள் எல்லாம் வீணாய்ப் போய்விட்டது. தவிர கலகம் செய்வதற்காக கூலி வாங்கிப் பிழைக்கலாம் என்று நினைத்து வேறு வேலைகளையும் விட்டு இதை நம்பி இருந்தவர்கள் வாயிலும் மண் விழுந்து விட்டது யாரும் கேள்வி கேள்கமாட்டார்கள் ஆர்பலத்தில் நின்று கொண்டு சண்டப் பிரசண்டமாய் பொய்யும் புளுகும் வண்டி வண்டியாய் அளக்கலாம் என்று நினைத்திருந்த "வீரர்"கள் இனி கூட்டத்தில் பேசுவதில்லையென்று உறுதி செய்துகொள்ள வேண்டியதாய்விட்டது. "ஐயோ பாவம்! வேறு கூட்டத்தில் கலகமும் செய்யக்கூடாது. தாங்களும் மேடையில் நின்று பொய்யும், புளுகும் அளக்கக்கூடாது என்றால் இது என்ன."அக்கிரமமான உத்திரவு" எப்படி ஜனங்களை ஏமாற்றுவது! இதற்கு ஏதாவது சட்ட சம்பந்தமான ஆக்ஷேபணை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும் அல்லது இவ்வுத்திரவு போடக்கூடிய இடத்திலாவது ஒரு பார்ப்பனரையே அதிகாரியாய் வைக்கச் செய்து அதை கேன்சல் செய்யவேண்டும் இவ்விரண்டிலொன்று செய்யாவிட்டால் எப்படி தேர்தலில் ஜெயிக்கமுடியும்" என்று சுயராஜ்ஜியக் கக்ஷியார் நினைக்கும்படியாய் விட்டது. சர்க்கார் "அக்கிரமத்திற்கு" யார் என்ன செய்யமுடியும். சட்டத்தையாவது மீறாமென்றாலோ 100, 200 கொடுத்தாவது ஜெயிலுக்குப்போக ஆள் கிடைப்பதில்லை. சட்டமெம்பரிடத்திலும் அட்வகேட் ஜெனரலிடத்திலும் போய்முறையிட்டு பார்ப்பதைத்தவிர வேறுவழி இல்லாமல் போய் விட்டது ஐயோ பாவம்!

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

80 வருஷகாலமாக பிரசித்திபெற்றது இந்தியாவில் ஏராளமாய் விற்பனையாகிவருகின்றது,
ஆர். கே. பரிமள மூக்குத்தூள்

சுமார் 80 வருஷங்களுக்குமுன் மதராசில் முதல் முதல் தோன்றி உலகமெங்கும் புகழ்பெற்ற அசல் ஷண்முகம் மூக்குத்தூள் என்கிற பட்டணம்பொடியை உபயோகிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும் சுறு சுறுப்பையும் கொடுத்துவருவது அசல் ஷண்முகம் பொடியே 80 வருஷ காலமாக சென்னையிலே சிறப்புவாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றுடும் நூற்றுக்கணக்கான பார்சல்களை சொல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, வாடை குணம், மணம், கிராம், நிறம், அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருகிறது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்துபோகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்! இன்புறுங்கள்!.

என். சாம்பசிவம் பிள்ளை ஹெட்கிளார்க் கார்டிக் பேக்டரி, அருவங்காடு:—நான் 34 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்து வருகிறேன் அதன்குணம் நாளது வரையில் கொஞ்சமாவது மாறுதல் கிடையாது.

கே. வி. ரெங்கசாமி அய்யர், வியாபாரி:—நான் 12 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்துவருகிறேன். அது இதர பொடியைவிட குணத்திலும், மணத்திலும், உயர்ந்ததாக இருக்கிறது என்பது என்னுடைய கொள்கை.

கனவான்களே :—

எங்கள் கம்பெனி பொடியை இதர கம்பெனி பொடியோடு சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். இதர கம்பெனி பொடியை ஓர் சிட்டிகை எடுத்து சில நிமிஷம் வைத்துப் பார்க்கவும். மேற்படி பொடியில் மெடிக்கல் பதார்த்தம் சேர்ந்திருப்பதால் பொடியை சுற்றி வேர்த்து கருமை நிறமாகக் காணும். இவ்வித செயர்க்கையினாலேயே மேற்படி பொடிகள் ஒருவித எரிச்சலான காரமும் உடனே கெட்டுப் போகக் கூடியதுமா யிருக்கிறது. மேற்படி பொடி மூளைக்கு மிகவும் கெடுதல் உண்டு பண்ணும் என்பது நாம் சொல்லாமலே நன்கு விளங்கும். ஆனால் எங்கள் பொடியோ செயர்க்கையில்லாமல் இயற்கையாய் தன்னுடைய சுயகுணத்தைக் கொண்டே, யாதொரு கெடுதலையும் உண்டு பண்ணமல் பொடி போடுவோருக்கு ஆனந்தத்தையும், ஆரோக்கியத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும், தருமென்பதும், எங்கள் அசல் ஷண்முகம் பொடியை ஒருதரம் போட்டுப் பார்த்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் என்பதற்கும் எங்கள் பொடியை மேலே சொல்லிய பிரகாரம் சோதித்தால் இரண்டுக்குமுள்ள வித்தியாசம் நன்கு விளங்கும்.

அசல் ஷண்முகம் பொடி விலை ஜாப்தா.

முதல்தரம் ஒரு வீசை	... ரூ.	4—4—0
இரண்டாந்தரம் ஒருவீசை	... ரூ.	3—4—0

வெளி ஊர்களில் ஏஜண்டுகள் தேவை விலை விஷயம் இன்றைக்கே எழுதித் தெரிந்து கொள்ளவும்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படு மென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

1 புட்டி 1-க்கு அணு 0—4—0 டஜன் புட்டிகள் ரூ. 2—4—0
ஒரு சேர் டின் ... ரூ. 1—8—0

ஹெட்டாபீஸ் :—ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி, லிமிடெட்,
போஸ்ட் பாக்ஸ் 140, மதருஸ்.

வெளிவூர் பிராஞ்சுகள் :—மதுரை பிராஞ்சு நே. 5. நகரா மண்டபம், அம்மன் சன்னதி, N. P. பரிமணம் பிள்ளை ஏஜண்ட்.
தேனி பிரான்சு டெ ஜார் தெரு நே. 6. வி. பி. ஷண்முகம் ஏஜண்ட்.
பொள்ளாச்சிபிராஞ்சு நே. 7, முனுசாமிரெட்டி ஏஜண்ட் சந்தைக்கருகில்
பி. பி. வெங்கட்டராம செட்டியார், பி. பி. நாகரத்னம் செட்டியார் வியாபாரம், தாராபுரம்.
எம். பாபு சாஹிப் & பிரதர்ஸ், வியாபாரம், பல்லடம்.
கே. எஸ். கிருஷ்ணப்ப செட்டியார், ஏ. சுப்பிரமணிய செட்டியார் மளிகை, திருப்பூர்.
பி. நடராஜ பிள்ளை, 4/57, ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்

சென்னை சட்ட சபை எலெக்ஷன்.

நாடார் மஹாஜனங்களுக்கோர் அறிக்கை

(மதுரை நாடார் மஹாஜன சங்க விளம்பரச் சுருக்கம்.)

*விழிமின்! எழுமின்! அறிமின்! கருதியகாரியம்!
கைகூடும் வரை சலியாது உழைமின்!*
(சுவாமி விவேகானந்தா)

ஐயன்மீர் !

1926-ஞு நவம்பர்மீ 8உ (அட்சயஞு ஐப்பசிமீ 23உ திங்கட்கிழமை நடைபெறும் சென்னை மாகாண சட்ட நிருபண சபைக்கு, நம் குலத்தினர், மதுரை, இராமனதபுரம், திருநெல்வேலி ஆகிய இம்மூன்று ஜில்லாக்களுக்கும் அங்கத்தினர்களாய் வருவதற்குப் போதிய சாதனங்கள் இருந்தும், அபிமானிகள் போதுமான வரை முன் வராததைக்குறித்து விசனிக்கிறோம். எனினும் திருநெல்வேலி ஜில்லா கிராமாந்திர தொகுதிக்காக, சதுர்வித உபாயங்களிலும் திறமைவாய்ந்த ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் அபேக்ஷகராய் முன் வந்திருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறோம்.

திருநெல்வேலி ஜில்லா நாடார்குல ஓட்டர்களே!

ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் நமது கான்பரன்ஸ்களுக்கு தவறாமல் விஜயம் செய்து, சிரமத்தைக் கருதாது முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளும் சிரமத்தையும் பொதுஜன ஊழியத்தில் அவருக்குள்ள திறமையையும் நீங்கள் நன்கறிந்திருக்கலாம். இவர் நமது குல முன்னேற்றமே தன்னேற்றமாகக் கொண்டவர். எந்த காரியத்தையும் விடாது முயற்சி எடுத்து முடிப்பதில் திறமை வாய்ந்தவர். சட்ட சபை சென்று எதற்கும் அஞ்சாது நம்குல நன்மைக்கும், தேச நன்மைக்கும் போர் புரிவதில் உத்தம போர்வீரன் போன்றவர்; ஆதலால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிநேகிதர்கள் சகிதம் போலிங் ஸ்டேஷன்களுக்குச் சென்று ஓட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அபிமானிகளே!

எலெக்ஷன் தேதியில் (8—11—26) ஒவ்வொருவரும் தங்களுக்கு செல்வாக்குள்ள பக்கங்களுக்குச் சென்று ஓட்டர்களை சேகரித்தனுப்பும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுழைக்கும்படி கேட்டுக் கொள்வதோடு, நம்குல ஓட்டர்கள் தங்கள் தங்கள் ஓட்டுகளை அவர்களுக்கு தவறாமல் கொடுத்தும் தங்களுக்கு தெரிந்த நம் ஏனைய சகோதரர்களின் ஓட்டுகளையும் அவருக்கு கிடைக்கும்படி செய்தும் இக்கனவானையே நமது பிரதிநிதியாக சட்ட சபையில் வீற்றிருக்கச் செய்ய சிறிதும் பின்வாங்கமாட்டீர்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம். தங்கள் உண்மையுள்ள,

ப. மா பாண்டிய நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
காரியதரிசிகள்.

ஸ்ரீமான் நாயககர்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் 24உ ஞாயிற்றுக்கிழமைதஞ்சாவூர் ஜில்லாவுக்குப் பிரசாரத்திற்காகப்போய் தஞ்சை, கும்பகோணம் முதலிய இடங்களிலும் மற்றும் பல கிராமங்களிலும் பிரசாரம் செய்துவிட்டு 28உ வியாழக்கிழமை ஈரோடு வந்து சேர்ந்தார்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சாஸ்வதி விலாசம் பிளேக் எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கானவர் [illegible] சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!!

கோயமுத்தூர்

இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஷ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 5,00,000—0—0
வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ...	ரூ. 73,900—0—0
தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது	ரூ. 50,430—0—0
டிபாசிட்டுகள்	ரூ. 86,346—7—4
Reserve Fund காப்புத் திரவியம் ...	ரூ. 2706—0—0
நடை முதல் தொகை	ரூ. 1,50,275—9—5

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்சேட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம் பாண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையில் [illegible] ரூபாய் 5[illegible]—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி செம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானல், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானல், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானல், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி.

குழந்தைகளுக்குத்தந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றண்டிக்கு முதன்மை பெற்றது.

சூஸ்பாரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. சிலவு வேறு.

சாலாம்மிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—3—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரதாசங்கள், முதலியவற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2: தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாணவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1- கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0.
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-8-0.

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம் இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.